27337

மொழிப் பிரச்னை

ஆச்சார்ய விநோபா

19033



சர்வோதய பிரசுராலயம்,

தஞ்சாவூர்.

மொழிப் பிரச்னை

★

ஆச்சார்ய விநோபா

பௌனர் – பிரம்ம வித்யா மந்திரில் கூடிய
தமிழ்நாடு சர்வோதய ஊழியர்களுக்கு
ஹிந்தியில் பேசியது

தமிழாக்கம்:

ஏ. வெங்கட்டராமன்

★

சர்வோதய பிரசுராலயம்,
தஞ்சாவூர்.

முதல் பதிப்பு - ஆகஸ்ட் 1965 — 2,000.
First Edn.: Aug. 1965 — 2,000.

Tamil translation of Talks
at Paunar
to Tamilnad Workers
by VINOBA
on Language Problem.

விலை : 60 காசுகள்.
Price: 60 nP.

Published by
Sarvodaya Prachuralayam,
Thanjavur

Branch of
Sarva Seva Sangh Prakasan,
Kashi.

Printed at
Ukkadai Sri Ambal Press,
Thanjavur.

பதிப்புரை.

சென்ற ஜனவரி மாதம் ஹிந்தி ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட்டவுடன் தமிழ் நாட்டில் அதை எதிர்த்து, மாணவர்களிடையே பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. பிப்ரவரி 15 வரை தமிழ்நாடெங்கும் மாணவர்களின் பலாத்கார நாசச் செயல்களால் ஒரு பயங்கரக்காட்சி ஏற்பட்டது. யாரும் சமாளிக்க முடியாத இந்நிலையில் விநோபாஜி வேதனையுடன் பிப்ரவரி 12 ல் உண்ணாவிரதம் தொடங்கினார். மொழிப் பிரச்னை தீர ஒரு மும்மொழித் திட்டத்தைக் கூறினார் அதை பிரதம மந்திரியும், இதர இராஜ்ய மந்திரிகளும் ஏற்றுக் கொண்டார்கள். பூரண அமைதி ஏற்பட்ட பின்பு, விநோபாஜி 16 - பிப்ரவரி பிற்பகல் தன் உபவாசத்தை முடித்துக்கொண்டார்.

பின்னர், சர்வோதய மண்டல் அங்கத்தினர்கள் விநோபாஜியை மார்ச் 16, 17 தேதிகளில் சந்தித்துப் பேசினார்கள். தமிழ்நாட்டு ஊழியர்களுக்கு விநோபாஜி மொழிப் பிரச்னையைப்பற்றி பல கோணங்களில் சிந்தித்து தம் ஆழ்ந்த பரந்த கருத்துக்களை விளக்கினார். இம் மூன்று ஹிந்தி பேருரைகளையும், மொழிபெயர்த்து என்றும் உபயோகப்படக் கூடியவாறு இச்சிறு நூலாக வெளியிடுகிறோம். பொது மக்களும், முக்கியமாக மாணவர்களும் படித்துப் பயனடைவார்களென்று நம்புகிறோம்.

தஞ்சாவூர்,
23—8—1965.

சர்வோதய பிரசுராலயம்

மொழிப்பிரச்னை

மொழிப் பிரச்னையைப் பற்றி நாட்டில் இப்பொழுது நிலவும் கருத்துக்களுக்கும் பல அங்கங்கள் உள்ளன. இதைப் பற்றி விவாதிக்க 20-25 சொற்பொழிவுகள் நிகழ்த்தலாம் இந்த விஷயம் அவ்வளவு விசாலமானது. சர்வோதய ஊழியர்கள் தமிழ்நாட்டில் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பதற்கு நீங்கள் சில வேலைத்திட்டங்களை சமர்ப்பித்திருக்கிறீர்கள். நான் அவற்றைப் பார்த்தேன், எல்லாம் நல்லதாகப் பட்டது. ஆனால் பார்க்கும் கண்ணோட்டமே முக்கியம்.

பாரத ஒருமைப்பாட்டின் ஆதாரம்

பாரதத்தைப் பற்றி சிந்திக்கும் பொழுது அதன் வரலாறு முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பத்ரிநாத் பாரதத்திலுள்ள பெரிய புண்ணியஸ்தலம். இமயத்தில், எல்லைப் பிரதேசத்தில், பாரதம்-திபெத் எல்லையில் இந்தக் கோயில் இருக்கிறது. பாரதம் முழுவதிலுமிருந்தும் யாத்ரிகர்கள் தரிசனத்திற்காக அங்கு வருகிறார்கள். அந்தக் கோயிலின் குருக்களும், அதை நடத்துபவர்களும் கேரளத்தைச் சேர்ந்த நம்பூத்ரி வகுப்பினர். வேறு யாரும் இல்லை. இந்த பாரத ஒருமைப் பாட்டை ஆங்கில மொழியா உருவாக்கியது ?

சிவபெருமான் தமிழகக் கடவுளென்பதை எல்லோரும் அறிவார்கள். "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" (எல்லா நாடுகளிலும் கடவுள்

இருக்கிறார்; அவரை நாங்கள் வணங்குகிறோம். தெற்கில் இருக்கும் சிவனை (தென்னாடுடைய சிவம்) எல்லாரும் அறிந்துள்ளனர்.) ஆனால் சைவசித்தாந்தத்தைப் பற்றிய நூல்கள் முக்கியமாக இரண்டு மொழிகளில்தான் கிடைக்கின்றன; ஒன்று தமிழ், மற்றது காஷ்மீர மொழி. இந்த சிவன் காஷ்மீரத்துக்கு எப்படிப் போயிற்று? ஆங்கிலமா சிவனை தமிழ் நாட்டிலிருந்து காஷ்மீருக்கு கொண்டு போய் சேர்த்தது?

பாரதத்தில் இந்த ஒருமைப்பாடு பண்பாட்டு அடிப்படையில் அமைந்தது இங்கே பத்தாயிரம் ஆண்டுகளாக கிழக்கையும் மேற்கையும், தெற்கையும் வடக்கையும்—நான்கையும் இணைக்கும் வேலை நடந்துள்ளது. தற்போது (ஆங்கில) 'சர்வோதயம்' மாத இதழில் திரு. திருச்சிற்றம்பலம்) மு. அருணசலம் தமிழக மகான்களைப் பற்றி எழுதி வருகிறார். அதை நான் படிக்கிறேன். ஆனால் அதில் முன்னர் நான் அறிந்திருக்காத விஷயம் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை.

தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரியுமோ தெரியாதோ! அவர்களுடைய மகான்களில் ஒருவரான அப்பர் பன்னிரண்டு ஆண்டுகள் வரை பீஹாரில் வசித்தார் என்பது உண்மை. தற்போதைய பீஹார் பண்டைய நாட்களில் ஜைனர்களின் மிகப் பெரிய புண்ணிய ஸ்தலமாக இருந்தது. ஜைன மத சித்தாந்தங்களை கற்கும் பொருட்டு அப்பர் பன்னிரண்டு ஆண்டுகளை அங்கு கழித்தார். அவர் ஜைனர்களின் மடங்களுக்குப் போய் அவர்களுடைய தத்துவங்களை அறிந்தார்.

ஹிந்தி மொழி பேசும் அனைவரும் அறிந்த வட இந்தியாவின் இருபெரும் சிறந்த மகான்கள் கபீரும், துளசிதாசரும். இருவரும் இராமனுஜ சம்பிரதாயத்

தைச் சேர்ந்தவர்கள். இது எப்படி நடந்தது? இராமானுஜர் வடகோடியை சரணடைந்தார். அவருடைய வைணவ சம்பிரதாயத்தின் மகான் ஆச்சாரியார் நம்மாழ்வார். ஆனுல் நம்மாழ்வாருடைய பெயரை மகாராஷ்டிரம் முதல் காஷ்மீர் வரை, வங்கம் முதல் அஸ்ஸாம் வரை யாரும் அறியமாட்டார்கள். அவருடைய பெயர் கூட யாருக்கும் தெரியாது. இராமானுஜரோ அவருடைய சிஷ்யர்களின் சீடர்களில் ஒருவர். நம்மாழ்வாருடைய கருத்துக்களைத்தான் இராமானுஜர் சொன்னுர். அவர் தன்னுடைய புதிய கருத்து எதையும் சொல்லவில்லை. இருப்பினும் அவர் வடகோடியில் அடைக்கலம் புகுந்ததால் அவர் பாரதம் முழுவதும் நடந்தே போனுர். அவருடை தாய்மொழி தமிழ். அதில் அவர் கொஞ்சம் தான் எழுதினுர்; பெரும்பான்மை வடமொழியில்தான் எழுதினுர். மகாராஷ்டிரத்தில் தலைசிறந்தவர்களான ஞானதேவரும் துகாராமும் சங்கராச்சாரியாரின் சீடர்கள். நீங்கள் அங்கு ஒவ்வொரு வீட்டிலும் இவ்விருவரின் பெயரைக் கேட்பீர்கள். நவீன காலத்தில் வங்காளத்தின் இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் சிறந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். இருவரும் சங்கர சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள். சங்கராச்சாரியாருடைய தாய்மொழி மலையாளம். அதனுல் இந்நிலை உருவாயிருக்க முடியுமா? அவர் வடமொழியில் எழுதினுர்; அதனுல் இத்தகைய நிலை உருவானது எழுதியதனுல் மட்டுமல்ல, சுற்றியதனுல் இது சாத்தியமாகியது.

ஸ்ரீ நகரில் சங்கராச்சாரியார் மலை

நான் ஸ்ரீநகருக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு பெரிய மேடை, சிறியமலை இருக்கிறது. அதனுடைய பெயர் "சங்கராச்சாரியார் மலை". நான் அந்த மலைக்கும்

போய் இருந்தேன். அங்கே காஷ்மீரிகள் ஒரு இடத்தைக் காட்டி இங்கு சங்கராச்ச ரியார் தியானம் செய்வார் என்று சொன்னார்கள் கேரளத்துக் குழந்தை ஸ்ரீநகர் மலையில் தியானம் செய்தது. இன்றளவும் மக்கள் அதை நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் காஷ்மீரில் முஸ்லீம்கள் அதிகம்; ஆனால் அவர்களும் இந்த மேடையை "சங்கரமலை" என்றே சொல்லுகிறார்கள். நான் காஷ்மீரில் யாத்திரை செய்த பொழுது அங்குள்ள மக்கள் என்னுடைய யாத்திரையை சங்கராச்சாரியாரின் யாத்திரையோடு ஒப்பிட்டு, 'சங்கரருக்குப் பிறகு நீங்கள்தான் இங்கு உங்கள் குருவோடு கொள்கையை பரப்ப வந்திருக்கிறீர்கள்' என்று சொன்னார்கள். நான் அஸ்ஸாமில் யாத்திரை செய்த பொழுது அதன் முக்கிய நகரமான கௌஹாத்திக்குப் போனேன். அங்கே காமாக்யாவினுடைய கோயில் இருககிறது. பழைய காலததில் அங்கே அறிஞர்களும் பண்டிதர்களும் வசித்து வந்தனர். அவர்களோடு விவாதம்—ஆலோசனை செய்ய சங்கரர் அங்கும் போனார். பின்னர் நான் கங்கைக்கடலை (கங்காசாகரம்) அடைந்தேன். இது கங்கை கடலோடு கலக்கும் இடம். இங்கும் சங்கராச்சாரியார் சில நாட்கள் தங்கி சாங்கியர்களுடன் விவாதம் செய்ததாகக் கேள்விப்பட்டேன். சங்கரர் துதியில் கங்காசாகரம் குறிக்கப்படுகிறது; "குருதே கங்கா சாகர கமனம்". கங்கா சாகரத்துக்குப் போவதால் மட்டும் முக்தி கிடைத்துவிடாது; அதற்கு ஆத்மஞானம் வேண்டும் என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது இதைப் போன்றே அவருடைய பஜகோவிந்த'த்திலும் கங்காசாகரத்தினுடைய பெயர் வருகிறது. சங்கராச்சாரியார் நிறைய யாத்திரை செய்தார். ஆனால் இன்று நாம் பாரதம் என்று சொல்வதின் எல்லையைத் தாண்டிப்போகவில்லை. பாரத ஒருமைப்பாட்டிற்காக இந்நாடு ஆங்கில மொழிக்கு கடன் பட்டிருக்க

வில்லே என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டுமென் பதற்காகவே இதை நான் சொல்லுகிறேன்.

குறைந்த பட்சம் எட்டு ஜன்னல்கள்

ஆங்கிலம் ஒரு ஜன்னல் என்ற கருத்து நம்மிடையே இருக்கிறது. அறிவாளர்கள் தங்கள் வீட்டிற்கு ஒரே திசையில் ஒரே ஒரு ஜன்னல் வைக்கமாட்டார்கள். நான்கு திசைகளிலும் தனித்தனி ஜன்னல்கள் வைக்கிறார்கள். அப்போதுதான் உலகக் காட்சி கிடைக்கிறது. ஒரே ஒரு ஜன்னல் எப்பொழுதும் ஒரே வகையான காட்சியையே வழங்கும். ஆகையால் ஆங்கில மொழியின் மூலமாகவே நாம் உலகத்தைப் பார்ததால் முற்றிலும் ஒரே வகையான காட்சியே நமக்குக் கிடைக்கும். நமது பாரதத்துக்குப் பல ஜன்னல்கள் வேண்டும். குறைந்த பட்சம் பிரெஞ்ச், ஜெர்மன், ருசியன், ஸ்பானிஷ், அரேபியன், சீனமொழி, ஜப்பான், ஆங்கிலம் இந்த எட்டும் வேண்டும். அப்போதுதான் உலகக் காட்சி கிடைக்கும். இல்லாவிட்டால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நமது சிந்தனை ஒரு சார்புடையதாகவே இருக்கும். இன்று நமது பெருந் தலைவர்கள் ஆங்கிலத்தின் உபகாரத்தை நினைவு கூறுகின்றனர், இது சரியே. அதனால் உபகாரம் கொஞ்சம் கிடைத்திருக்கிறது, ஆனால் அது மிகவும் ஒருதலையானது. ஆகையால் உலக அறிவைப்பெற ஆங்கிலத்தின் மகத்துவம் மிகவும் கொஞ்சம், அதிகமில்லை.

நான் சிறையில் இருந்த பொழுது அதிகமானவர்கள் ஒரு புத்தகம் படித்து வந்தனர். தாதா தர்மாதிகாரி போன்றவர்களும் என்னுடன் இருந்தனர். அந்தப் புத்தகத்தின் பெயர்—" *Inside Asia* ". அதில் ஆசியா முழுவதன் விபரங்கள் தரப்பட்டிருந்தன. அங்கிலேயர்

களிடமும் அமெரிக்கர்களிடமும் ஒரு பழக்கமிருக்கிறது. அவர்கள் 15–20 நாட்களில் உலகம் முழுவதும் சுற்றி விட்டு புத்தகம் வெளியிட்டு விடுகிருர்கள். அந்தப் புத்தகம் மிகவும் புகழப்படுகிறது எங்கள் நண்பர்களான அரசியல் கைதிகள் " மிகவும் அழகான புத்தகம், ஆனல் இந்தியாவைப் பற்றி தவருக எழுதப்பட்டிருக்கிறது" என்று சொல்லுவார்கள். "சகோதரர்களே, இவ்வாறே மற்றவர்களும் சொல்லுவார்கள். சீனர்கள், மீதமெல்லாம் சரிதான், சீனத்தைப்பற்றிதான் தவருக எழுதப்பட்டிருக்கிறது என்றே சொல்லுவார்கள். நீங்கள்பாரதச் சூழ்நிலையை அறிந்தவர்கள், ஆகையால் இந்தியாவைப் பற்றிய விபரங்கள் இந்த நூலில் சரியல்ல என்று தெரிகிறது. சீன, ஜப்பான், இந்தோசீன ஆகியவற்றைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அவைகளைப்பற்றி இதில் எழுதப்பட்டுள்ளவற்றை சரியென்று ஒப்புக்கொள்கிறீர்கள். வடமொழியில் காளிதாசன் இதற்கு " பரபிரத்யய நேய புத்தி " அதாவது மற்றவரின் அறிவைக்கொண்டு தனது அறிவைப் பயன்படுத்தாமல் சிந்திப்பது எனப் பெயரிட்டான். இங்கிலாந்து, சீன, ருசியா, ஜப்பான் ஆகிய ஒவ்வொன்றையும் பற்றி எழுதுகிருர்கள். நாம் அதைப் படித்துவிட்டு சரியென்று எண்ணி ஏமாற்றமடைகிறோம்" என்று நான் அவர்களுக்கு விளக்கினேன்.

நமக்கும் ஆண்மை வேண்டும்

ஆகையால் நாம் இன்னுமொரு இரண்டாவது ஜன்னலை அமைக்க வேண்டும் ஆங்கிலேயர்கள் செய்ததைப் போன்று நாமும் நமது ஆண்மையைக் காட்ட வேண்டும். உலகம் முழுவதும் சுற்றி நாம் நமது கண்களிஞல் அறிவைப் பெறுவோம் ஆங்கிலேயர்கள் ஆண்மையைக் காட்டிஞர்கள். அதிலிருந்து நாம் இல

வசமாக பலனடையக் கருதுகிறோம். நான் உண்டேன், மருந்து குடித்தேன், தூங்கினேன் அல்லது குளித்தேன் என்றால் இவற்றின் லாபம் உங்களுக்குக் கிடைக்காது. நீங்கள்தான் உங்களின் குளியலையும் தூக்கத்தையும், உணவையும், மருந்தையும் தங்களாகவே கவனித்துக் கொள்ள வேண்டும். ஆங்கிலேயர்கள் நமக்கு அறிவைக் கொடுத்தார்கள். நாம் அதைப் படிக்கிறோம். ஆனால் அவர்கள் எவ்வளவு அறிவை-அறியாமையைக் கொடுத் தார்கள் என்பதையும் சிந்தனை செய்வது அவசியம்.

ஆங்கிலம் பேசுவோர் 30 கோடியே!

ஆங்கிலம் கற்றுக்கொண்டால் உலகம் முழுவதும் சுற்றிவந்துவிட முடியும், அது உலக மொழி என்று எண்ணுகிறார்கள். இது மிகவும் தவறான எண்ணம். உலக மக்கள் தொகை 300 கோடி இதில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் மொத்தம் 30 கோடி. இதனால் ஆங்கிலத் தைக்கொண்டு நமது வேலைகளைச் செய்யமுடியாத பகுதி களும் உலகத்தில் இருக்கின்றன. திரு. மேனனும், சதீஷ்குமாரும் இப்பொழுதுதான் உலகமெங்கும் சுற்றி விட்டு வந்தார்கள். மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொள்ள வேண்டியிருந்த பல நாடுகள் அவர்களுக்குக் கிடைத்தன. அவ்விடங்களில் ஆங்கிலம் ஒன்றும் பயன் படவில்லை. ஆகையால் ஆங்கிலம் கற்றுக்கொண்டால் உலகம் முழுவதும் போகமுடியும் என்பதல்ல இவற்றை யெல்லாம் சொல்லும்போதும், ஆங்கிலத்தினால் ஏற்பட்ட நன்மைகளையும் நான் அறிந்திருக்கிறேன்.

ஆங்கிலத்தினால் மட்டுமே விஞ்ஞானம் முடிவு பெறவில்லை.

இன்னொரு விஷயத்தையும் புரிந்துகொள்ள வேண் டும். ஆங்கிலம் வந்தால் விஞ்ஞானம் வந்துவிடும் எனச்

சிலர் நினைக்கிருர்கள். இந்தக் கருத்தும் தவறு. சில விஞ்ஞானங்களுக்கு ஜெர்மன் மொழி கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த விஞ்ஞானம் ஜெர்மன் மொழியில் வளர்ச்சியடைந்தது, ஆங்கிலத்தில் அல்ல. சில நவீன விஞ்ஞானங்கள் ருசிய மொழியில் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆகையால் 'ஆங்கிலமும் விஞ்ஞானமும்' என சமன்பாடு செய்ய முடியாது. நீங்கள் வெவ்வேறு விஞ்ஞானத்துக்கு வெவ்வேறு மொழிகளைக் கற்கவேண்டும்.

தமிழ் மக்களுக்கும், வங்காளியருக்கும் ஆங்கிலம், ஹிந்தியைப் போன்று அவ்வளவு அந்நிய மொழியல்ல என்பது சிலருடைய கருத்து. இதைக் கொஞ்சமும் என்ஞல் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் பாரதத்தின் எல்லா மொழிகளையும் கற்றிருக்கிறேன். ஆங்கிலமும் தெரியும். ஆங்கிலம் கற்றுக்கொள்ள உழைத்த உழைப்பிஞல் பாரதத்தின் எல்லா மொழிகளையுமே கற்றுக்கொள்ள முடியும். இது என்னுடைய சொந்த அனுபவம்.

மொழிச் சாத்திரம்.

நான் வேலூர் சிறையில் இருந்தேன். அப்பொழுது ஒரே சமயத்தில் நான்கு மொழிகள் கற்றுக்கொண்டேன் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம். "நீங்கள் நான்கு மொழிகளை ஒரேயடியாக ஏன் கற்கிறீர்கள்?" எனச் சிலர் கேட்டனர் "ஐந்து இல்லை, ஆகையால்" என்று நான் பதில் சொன்னேன். ஐந்து இருக்குமாஞல் ஐந்தையும் கற்றுக்கொண்டிருப்பேன்." பாருங்கள்: மருந்து (தமிழ்), ಮದ್ದು (கன்னடம்), ಮಂದು (தெலுங்கு) = மெடிஸன். இவைகளோடு மெடிஸனுக்கு என்ன சம்பந்தம்? ஆஞல் மத்து, மருந்து, மந்து — எல்லாம் ஒரே பொருள். "பாலு" வையும் "ஹாலு" வையும் எடுத்துக்

கொள்வோம். "ப" வை "ஹ" ஆக்கிவிட்டால் கன்னட மாகிவிடும். "ஹ" வை "ப" ஆக்கினால் தமிழ் - "பரப்பன் பள்ளி"; "ஹரப்பன் ஹள்ளி". எனக்கு மொழிச்சாத்திரம் தெரியும். "பி" "எச்" ஆகிறது, ஆங்கில எழுத்துக் களிலும் இவ்விரண்டும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஜப்பானிய மொழியிலும் "ப" "ஹ" ஆகிறது, "ஹ" "ப" ஆகிறது. "நிச்ஹோன்" சந்தி யாகும் போது "நிப்பன்" என்றாகிறது. இது ஜப்பானிய பெயர். "பி" "எச்" ஆகிய இரண்டும் பரஸ்பரம் மாறிக்கொள்ளக்கூடியன. இத்தகைய உத்திகளை எல் லாம் கற்றுக்கொண்டேன். அவற்றினால் ஒப்புநோக்கி தென்னகத்தின் நான்கு மொழிகளையும் படித்தேன்.

பாரதத்தில் இருமொழிகளே

இவ்வாறு பார்ப்போமானால் இந்நான்கு மொழிகளும் சேர்ந்து ஒரே மொழி. மீதமுள்ள பாரதத்தின் மொழி களெல்லாம் சேர்ந்து ஒரு மொழி இம்மாதிரி பாரதம் முழுவதும் இரண்டே மொழிகள் இருக்கின்றன நீங்கள் ஹிந்தி கற்றுக்கொண்டுவிட்டால் மகாராஷ்டிரம், குஜராத், இராஜஸ்தான், பஞ்சாப், ஹிமாசலம், காஷ்மீர, உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிசா, வங்காளம், அஸ் ஸாம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் உங்களு டைய ஹிந்தியைப் புரிந்துகொண்டு விடுவார்கள். இதை நான் அனுபவபூர்வமாகச் சொல்லுகிறேன். நான் எல்லாப் பிரதேசங்களிலும் யாத்திரை செய்திருக்கிறேன். கட்டாக்கில் நான் சொற்பொழிவாற்றியபோது அங்கிருந் தவர்கள், இதை மொழிபெயர்க்க வேண்டிய அவசிய மில்லை என்று சொன்னார்கள். அவர்கள் என்னுடைய பேச்சைப் புரிந்துகொண்டார்கள். பண்டித நேரு கௌஹாத்தியில் ஹிந்தியில் பேசினால் பொதுவாக அங் குள்ளவர்கள் அதைப் புரிந்துகொண்டனர். ஹிந்தியில்

"மைம்" என்பதை அஸ்ஸாமியில் "மயி" என்கிருர்கள். ஹிந்தி "ஜாஊ" என்பது அஸ்ஸாமியில் "ஜாம்" ஆகையால் தென்னிந்திய மக்களுக்கு ஆங்கிலத்தைப் போல ஹிந்தியும் அந்நிய மொழி என்று சொல்லுவதில் சாரம் எதுவுமில்லே.

இலக்கண ஒருமைப்பாடு

மிகக் குறைவாக வடமொழி சொற்களேக் கொண்ட மொழி தமிழ்தான். ஆனுல் அதிலும் நான் தத்சம, தத்பவ வடிவங்களில் நூற்றுக்கணக்கான சமஸ்கிருத சொற்களேப் பார்க்கிறேன். உதாரணம்: சமஸ்கிருதத்தின் "பர்வ" என்ற சொல் கன்னடத்தில் "ஹவ்வா", தமிழில் "பவ்வா", தெலுங்கில் "பவமு" என்று அதைச் சொல்லுவோம். இப்பொழுது மூல தாதுவை (ரூட்) எடுத்துக்கொள்வோம். சமஸ்கிருதத்தில் "சம்" ஒரு தாது இதற்குப் பேசுதல் என்பது பொருள். அதிலிருந்து "சப்தம்" வந்தது. "செப்பும்" "சொல்லும்" என்பவை என்ன? சப்தம் என்ற சொல் உருவான "சப்" என்ற தாதுவிலிருந்து தான் இந்த "செப்பும்" என்பதும் உண்டாயிற்று. "சொல் வேண்டும்" என்பது என்ன? "ஸ்வர்" அதாவது "சொல்", "சப்" என்பது "செப்பு". இவ்வாருன நூற்றுக்கணக்கான சொற்களே சொல்ல முடியும். இன்னுமொரு உதாரணம்: "வர்ண" சமஸ்கிருத சொல், இதற்கு எழுத்து என்பது பொருள். ஹிநதியில் 36 எழுத்துக்கள் இருக்கின்றன இந்த "வர்ண" என்ற சொல் சமஸ்கிருத "வரணே" என்ற தாதுவிலிருந்து பிறந்தது. தமிழில் இதற்கு "வரை" அதாவது எழுது, தெலுங்கில் "வ்ராயு" எனப்படுகிறது ஆகையால் தமிழ் - தெலுங்கு பேசுபவர்களுக்கு ஹிந்தி ஆங்கிலத்தைப்போல மிகவும் வேறுபாடுடைய மொழி எனக் கூறுவது அறியாமையைத் தவிர வேருென்றும் இல்லே.

ஒரு ஆச்சர்யமான விஷயம் சொல்லிகிறேன். பாரதத்தில் சென்சஸ் (ஜனகணிதி) எடுக்கும் பொழுது ஒவ்வொருவரின் தாய்மொழி என்ன என்பதும் குறிக்கப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதில் சமஸ்கிருதத்தைத் தங்கள் தாய்மொழி என எழுதச் செய்த மக்களும் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் தமிழ் நாட்டிலும், கொஞ்சம் கேரளத்திலுள்ள பாலக்காட்டிலும் இருக்கிறார்கள். சமஸ்கிருதத்தை தாய்மொழி எனப் பதிவு செய்து கொண்டவர்கள் காசியில் கிடைக்கவில்லை; தமிழ் நாட்டிலும், கேரளத்திலும் இருக்கிறார்கள். ஹிந்தி கறபது மிகப்பெரும் சுமையாகிவிடும் என்ற அனுபவம் இதுவரை ஏற்படவில்லை.

கிழக்கு பாகிஸ்தானிலும் வங்கமொழி

நான் கிழக்கு பாகிஸ்தானுக்குப் போனேன். அங்கே பள்ளிக்கூடங்களில் தங்கினேன். பள்ளிகளில் நூல்நிலையங்கள் இருந்தன. அவைகளில் உள்ள புத்தகங்களை நான் படிப்பேன் அங்குள்ள குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்பதை நாள்தோறும் நான் கற்று வந்தேன். அங்கிருந்த விஞ்ஞான நூல்களெல்லாம் வங்காளியில் இருந்தன. பாரதம், பாகிஸ்தானம் எனப் பிரித்து நாம பெரிய பாதகம் செய்துவிட்டோம். வங்காளியையும், உருதுவையும் இரண்டு துண்டுகளாகச் செய்துவிட்டோம். இரு மொழிகளையும் நாம் சக்தியற்றவைகளாக்கிவிட்டோம். அங்குள்ள பாடப் புத்தகங்களில் இருக்குமளவு வடமொழிச் சொற்கள் ஹிந்தியிலும் கூட இருக்காது இவ்வளவு அதிகமான சமஸ்கிருதச் சொற்களை அங்கிருக்கும் முஸ்லீம்கள் பேசுகிறார்கள். நான் ஹிந்தியில் பேசுவேன். அது வங்காளியில் மொழி

பெயர்க்கப்படும். நான் பேசும் ஹிந்தியை அவர்கள் பாதிக்குமேல் புரிந்து கொண்டார்கள். எனது சொற்பொழிவில் ஏதாவது நகைச்சுவை தென்பட்டால் உடனே சிரித்து விடுவார்கள். சிரிக்க அவர்கள் மொழி பெயர்ப்பை எதிர்பார்ப்பதில்லை. அங்குள்ள மக்களுக்கு அதிகமாக சமஸ்கிருதம் தெரியும் என்பது எனக்குத் தெரியும் ஆகையால் நானும் ஹிந்தியில் அதிகமான வட மொழிச் சொற்களைப் பயன்படுத்தினேன். காஷ்மீர் போனபோது ஹிந்தியில் அராபிய சொற்களை அதிகமாகக் கலந்து பேசினேன்.

ஹிந்தி மிகவும் பரந்த மொழி

தெற்கில் சுமார் 3½ கோடி தெலுங்கு பேசும் மக்கள் இருக்கிறார்கள் அவர்களில் ஒரு கோடிபேர் நன்றாக ஹிந்தியைப் புரிந்து கொள்கிறார்கள் - பட்டிக்காட்டு மக்கள், தெலிங்கானா கர்நூல், விஜயவாடா போன்ற இடங்களில் வசிக்கும் மக்கள் உட்பட கர்நாடகத்தில் வீதர், ராய்ச்சூர், குல்பர்க்கா, தார்வார் முதலிய பகுதிகளிலும், பெங்களூர் முதலிய மாவட்டங்களிலும் ஹிந்தியைப் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். தமிழகத்தில் ஹிந்தியைப் புரிந்து கொள்ளும் மக்கள் குறைவாக இருப்பார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? அங்கு ஹிந்தியை புரிந்துகொள்பவர்கள் இல்லாதிருந்தால் யாத்திரை எப்படி நடைபெறும்? பாரதம் முழுவதிலும் நடைபெறுகின்ற யாத்திரைகள் எப்படி நடக்கின்றன? யாத்ரீகர்கள் பாரதம் முழுவதும் ஹிந்தியை பழக்கத்தில் கொண்டு வந்து விட்டார்கள் ஆகையால் பழங்காலம் முதலே இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மகாராஷ்டிர சத்ரபதி சிவாஜியின் சபையில் "பூஷன்" என்னும் பெயருடை ஹிந்தி

அரசவைக் கவிஞன் இருந்தான். அவன் "சிவ-பாவனி" என்ற ஹிந்தி காவியம் எழுதியிருக்கிருன். அஸாம் ஆறுகளைக் கடக்கப் பயன்படும் படகுகளை செலுத்து பவர்கள் ஹிந்தி பேசுபவர்கள். இதனால் ஹிந்தியை பெரிய சுமையாகக் கருதுவது தவறு.

பாரதத்தில் எல்லாம் நடுநிலை

பாரதத்தை ஐரோப்பாவின் எந்த ஒரு நாட்டுடனும் சேர்க்கவோ ஒப்பிடவோ முடியாது. ஐரோப்பாவின் கூட்டமைப்பு (பெடரேஷன்) உருவானால் அது பாரதத்திற்கு சமமாக இருக்கும். தற்போது அவர்கள் ' பொது மார்க்கெட் " (காமன் மார்க்கெட்) அமைக்கும் முயற்சியில் இருக்கிருர்கள்—அதுவும் முழு ஐரோப்பாவிலும் அல்ல, பாதியில். ஆனால் இது கூட இன்னும் உருவான பாடில்லை. ஆனால் நம்முடைய நாட்டில் "பொது மார்க்கெட்' "பொது அரசாங்கம்" "பொதுவானப்பண்பாடு' ஆகிய அனைத்தும் இருக்கின்றன. காசியிலுள்ள மக்கள் இராமேஸ்வரத்தை தரிசிக்க விரும்புகின்றனர்; இராமேஸ்வரத்து மக்கள் காசியை தரிசிக்க ஆசைப்படுகிருர்கள். ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்க்க விரும்பினால் அவைகளின் இணைப்பு மொழியாக எந்த மொழி இருக்கும் என்பதை அவர்களால் சிந்திக்கவே முடியவில்லை. இருந்தாலும் நாம் ஆங்கிலத்தை " நடுநிலை மொழி " ஐரோப்பாவின் " இணைப்பு மொழி " எனக் கருதுகிரோம்.

எஸ்பெரண்டோ மொழி

நேற்றைய முன்தினம் எனக்கு எஸ்பெரண்டோக் காரர்களிடமிருந்து கடிதம் வந்தது. உலக இணைப்பு மொழியாக ' எஸ்பெரண்டோ ' இருக்க வேண்டுமென்

பது அவர்களுடைய விருப்பம். நான் அந்த மொழியைக் கொஞ்சம் கற்றுக் கொண்டிருக்கிறேன். அதில் நான் கையெழுத்துப் போட வேண்டுமென்று அவர்கள் விரும்புகிருர்கள். அந்த வேண்டுகோளுக்கு நான் பதில் எழுதினேன்: " அதனிடம் எனக்கு மதிப்பு உண்டு. ஆனுல் அது உலக இணைப்பு மொழியாக முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லே. காரணம், ஐரோப்பாவின் பத்து மொழிகளைக் கருத்தில்கொண்டே எஸ்பெரண்டோ உருவாகியிருக்கிறது. இதில் ஹிந்தி, சீனம் ஆகிய இரண்டு மொழிகளும் இடம்பெறவில்லே. இவ்விரண்டு மொழிபேசுவோர் சேர்ந்து 110 கோடிபேர் இருக்கிருர்கள். 110 கோடி மக்கள் பேசும் மொழிகளின் சொல் ஒன்றுகூட அதில் இல்லே. ஆகையால் இது முழு நடுநிலேயானது அல்ல. ஐரோப்பியர்கள் இப்பொழுது இணைப்பு மொழியாக எதை வைத்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கும். ஆனுல் இதை சிந்திக்க வேண்டிய அவசியமில்லே. ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு மொழிபேசும் நாடுகளேயே அமைத்துள்ளனர் ஒரு நாட்டிலிருந்து இன்னெரு நாட்டிற்குப் போக "விசா" "பாஸ்போர்ட்" அவசியம் இருபது இருபத்தைந்து நாடுகள், இருபது இருபத்தைந்து மொழிகள். அவை அனைத்தும் ஒன்ருனுல்தான் ஐரோப்பா ஒன்ருகும். மாஸ்கோ வால்கா நதியிலிருந்து யாத்திரிகர்கள் நீரை லண்டனுக்குக் கொண்டுபோய் செயின்ட் பால் கதீட்ரலில் அபிஷேகம் செய்வார்கள். இதைப்போலவே தேம்ஸ் நதி நீரைக் கொண்டுபோய் மாஸ்கோ கடலில் சமர்ப்பணம் செய்யப்போவார்கள் மாஸ்கோவில் சிவனேயும், செயின்ட் பாலில் கிருஷ்ணனேயும் பிரதிஷ்டை செய்யவேண்டும் அப்போதுதான் மாஸ்கோவின் நீர் லண்டனுக்கும் லண்டன் தண்ணீர் மாஸ்கோவுக்கும் போகும்.

நிலப் பிரச்னையுடன் ஒருமைப்பாடு

நிலப்பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. இது ஒன்றும் கலாச்சார வேலைத்திட்டமல்ல. கலாச்சார வேலைத்திட்டத்தை எடுத்துக்கொண்டு உலகம் முழுவதும் சுற்ற முடியும். சினிமா காண்பிப்பது, பாடுவது, நடனம் முதலியன உலகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகளை பற்றி நான் சொல்லவில்லை. பொருளாதார புரட்சிக்கான வேலைத்திட்டம், நிலப்பிரச்னையை எடுத்துக்கொண்டு தமிழ்நாடு முதல் அஸ்ஸாம் வரை பாபா யாத்திரை செய்ய முடிகிறது. ஆனுல் ஏதேனுமொரு பொருளாதாரப் புரட்சி வேலைத்திட்டத்தை எடுத்துக்கொண்டு கம்யூனிசத்தைப் பிரசாரம் செய்ய பாஸ்போர்ட் இல்லாமல் சுதந்திரமாக ஐரோப்பாவில் சுற்றமுடியுமா ? இதைப் போன்றே இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவன் ஜனநாயகத்தின் மதிப்பைப் பிரசாரம் செய்ய ருஷ்யா போகமுடிகிறதா ? இங்கோ இவ்வாருன வேலைத்திட்டத்தோடு மனிதன் போகிருன். மக்கள் இதைக்கேட்டு ஏற்றுக்கொள்கின்றனர். இது எதைக் காட்டுகிறது ? பாபாவா பாரதத்தை ஒன்று படுத்திஞர் ? ஆகையினுல் தான் பாரதம் மூன்றுமொழிகளை ஏற்றுக் கொள்ளுவது சுமையல்ல என்று கருதுகிறேன். இங்கே மும்மொழித்திட்டம் யோசிக்கப்பட்டு வருகிறது. பொது மார்க்கெட், பொது அரசாங்கம், பொதுவான பண்பாடுடைய இந்நாட்டிற்கு இது ஒரு பெரிய விஷயமல்ல.

புதிய அவதாரம்

இம்மாதிரி மும்மொழிச் சுமையை குழந்தைகளின் மீது ஏன் சுமத்தவேண்டும் என்று சிலர் கேட்கிருர்கள். நல்ல அறிவும், பண்பாடும் உடையவர்கள்கூட கேட்கின்றனர் ஆனுல் இவர்கள் பழங்காலத்தைச் சேர்ந்த

வர்கள். பழங்கால மக்கள் தற்கால மக்களைப் புரிந்து கொள்ள முடியாது இதற்கு இராமாயணத்தில் உதாரணம் இருக்கிறது. கடவுள் விஷ்ணு இரண்டு அவதாரம் எடுத்தார்—ஒன்று இராமாவதாரம், மற்றொன்று பரசுராம அவதாரம். இருவரும் பெருமாளினுடைய அவதாரங்கள். ஆனால் இராமருடைய கொள்கைகளை பரசுராமர் புரிந்து கொள்ள முடியவில்லை. இருவருக்குமே மோதல் ஏற்பட்டது. இப்பொழுது நம்முடைய ஆர். டி பி. சுப்பிரமணியம் வினோபாஜியும் இராஜாஜியும் ஒன்றுகிவிட்டால் பிரச்னை தீர்ந்து விடும் என்று சொல்லுகிறார். இருவரும் உத்தமர்கள் என்பது அவர் கருத்து. பாபா இராஜாஜி உத்தமர் என்பதை ஏற்றுக் கொள்ளுவார்; இராஜாஜியும் பாபா உத்தமர் என்பதை ஏற்றுக்கொள்ளுவார். இருவரும் அத்தாட்சி பெற்ற உத்தமர்கள் என்பதை சுப்பிரமணியம் ஏற்றுக்கொள்ளுகிறார். ஆனால் நான் எனது மனதில் சிந்திக்கிறேன், அவருடைய (இராஜாஜி) சிந்தனை ஒருவகையாக அமைந்துவிட்டது. அவர் ஒரு ஜன்னல் அமைத்துக் கொண்டிருக்கிறார். அதிலிருந்து அவர் எவ்வாறு பார்க்கின்றாரோ அவ்வாறு தெரிகிறது. நாம் அமெரிக்காவின் பக்கம் சேர்ந்துவிடவேண்டுமென்று இராஜாஜி சொல்லுகிறார். எனக்கு அது பிடிக்கவில்லை. அவர் தேசபக்தர் என்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. என்னையும் தேசபக்தனாக மக்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். நான் "ஜெய்ஜகத்" சொன்னபோதிலும் மக்கள் என்னை தேசத்துரோகியாகக் கருதமாட்டார்கள். இருந்தாலும் நானும் இராஜாஜியும் ஒரே மாதிரியான சொற்களைப் பேச வேண்டுமென்ற நம்பிக்கை ஆண்டவன் அருள் இருக்குமானால் நிறைவேறும். நாராயணனுடைய இரண்டு அவதாரங்களுக்குமே ஒத்துவரவில்லை. ஆனால் இங்கோ இரண்டுதலைமுறை வித்தியாசமிருக்கிறது அவர் யோசிக்கும் முறை ஒரு வகையானது; என்னு

டைய பழக்கம் வேறு வகையானது. இதில் ஆச்சர்ய மடைய வேண்டியதில்லை. டாக்டர் அறத்தின் பழக்கம் மூன்றுவது ஒருவகையாக இருக்கலாம். ஏனெனில் அவர் வாலிபர், எனக்குப் பின் தலைமுறையைச் சேர்ந்தவர்.

கருத்தை சொல்லுவதில் பாபாவுக்கு திருப்தி

எனக்கும், மற்ற தலைவர்களுக்கும் பெரியவித்தியாச மிருக்கிறது அது இதுதான். நான் எனது கருத்துக்களை மக்களிடம் சொன்ன பிறகு, அவர்கள் அவைகளை அமல் நடத்த வேண்டுமென்று நான் வற்புறுத்துவதில்லை. இது என்னிடமுள்ள மிகப் பெரிய விஷயம். நான் தலைவ ரில்லை என்பதே இதன் பொருள். வற்புறுத்தாத தலைவர் என்பதை எண்ணவே முடியாது. " பாபாவின் கருத்துக் கள் எனக்குப் பிடிக்கவில்லை " என்று டாக்டர் அறம் சொன்னுல், " சந்தோஷம், உங்கள் கருத்துக்களே உங் களுக்குப் பிடிக்குமானுல் சரி " என்று பாபா சொல்லு வார் என்னுடை கருத்து என்னிடமே இருக்கட்டும். நீங்கள் அதைக் கேட்டுவிட்டாலே எனதுவேலை நடந்து விடும். கேட்டால் போதும் என்பதல்ல இராஜாஜியின் விஷயம். அவர் சுதந்திராக் கட்சியை அமைத்து, அர சாட்சி அக்கட்சியின் கைக்குவர வேண்டுமென்று முயற்சி செய்கிருர். தன்னுடைய கருத்துக்களை மக்களிடம் சொல்லுவதோடு மட்டும் அவருக்குத் திருப்தி ஏற்படுவ தில்லை. கட்சித் தலைவர்களுக்கு இம்மாதிரியான திருப்தி ஏற்படாது.

சங்கரரின் ஞானசாத்திரம்

பாபா கொள்கையைச் சொல்லி திருப்தியடைகிருர். இது சங்கராச்சாரியாருடைய பழக்கம். ஒரு முறை சங்கர ரிடம், " மக்கள் உங்கள் கருத்துக்களை புரிந்து கொள் ளாவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள் " என்று கேட் கப்பட்டது. இதற்கு அவர் சொன்ஞர் : " இரண்டாவது முறை விளக்கிச் சொல்லுவேன். இரண்டாவது முறை

யும் புரிந்து கொள்ளாவிட்டால் மூன்றுவது முறை சொல்லுவேன். இவ்வாறு எடுத்துச் சொல்லிக்கொண்டேயிருப்பேன். விளக்கிச் சொல்லுவதே என்னுடைய சாத்திரம்.'' யாரேனும் குற்றம் புரிந்தால் என்ன செய்வீர்கள் என்று இயேசு கிறிஸ்துவிடமும் கேட்டார்கள்.'' மன்னிப்பேன். மறுமுறையும் குற்றம் புரிந்தால் இரண்டாம் முறை மன்னிப்பேன். இவ்வாறு மன்னித்துக்கொண்டே (Seven times seven) இருப்பேன்'' என்றுர் இயேசு. இயேசு 'நாங்கள் மன்னிப்பு சாத்திரத்தையே ஒப்புக் கொள்ளுகிறேம்'' என்றுர். சங்கராச்சாரியார் ''நாங்கள் ஞானசாத்திரத்தை ஏற்றுக்கொள்ளுகிறேம்'' என்று சொன்னர். பாபாவின் பக்தி சங்கரரின் வகையைச் சேர்ந்தது. கருத்தை விளக்குவது தன்னுடைய வேலை என்று அவர் நினைக்கிறுர். விளக்கி விட்டார்; ஏற்றுக் கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் ஜனநாயகம். பாபாவுக்கு எவ்வளவு அதிக அறிவு இருந்தாலும் ஜனநாயகம் அவருக்கு இரண்டல்ல, ஒரு ஓட்டுதான் கொடுக்கிறது அந்த ஒரு ஓட்டையும் கூட போடாத மனிதர் அவர் ஓட்டும் போடுவதில்லை; தேர்தலுக்கும் நிற்பதில்லை. கருத்து ஏதேனும் தோன்றினல் சொல்லுகிறுர்.

பாபா—இராஜாஜி

இத்தகைய நிலையில் இராஜாஜியும் பாபாவும் ஒன்ருக வேண்டுமென்று நீங்கள் விரும்பினல் அது நடக்காது. இருவருக்கும் இதய ஒற்றுமை இருக்கிறது. அவரும் கடவுளை ஒப்புக் கொள்கிறுர். கடவுளைத்தவிர வேறு பெயரைச் சொல்லுவதில்லை; எப்பொழுதும் தர்மம், நாட்டு ஐக்கியம் ஆகியவற்றைப் பேசுகிறுர். கேரளத்தின் !33 இடங்களில் 12 இடங்களுக்குத் தேர்தலில் சுதந்திராக் கட்சியினர் நின்றுர்கள். ஆனல் அதில் ஒருவரே வெற்றி பெற்றுர். பாக்கி எல்லோரும் ஜாமீன் இழந்துவிட்டார்கள். ஆனலும் அவர் தன்னுடைய கட்சி

யினரிடம் " நீங்கள் தர்மத்தின் வேலை செய்கிறீர்கள், அதாவது சுதந்திராக் கட்சியின் கைக்குஆட்சி வரவேண்டும் " என்று சொல்லுகிருர். அவர் கடவுள், தர்மத்தின் பெயரைச் சொல்லுகிருர்; சத்தியத்தில் பற்றை மதிக்கிருர் பாபாவும் இந்தப் பெயர்களையே சொல்லுகிருர்.

ஆனல் இருவருக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. பாபா கருத்தைச் சொல்லிவிட்டு அமைதி அடைந்து விடுகிருர். ஆனல் அவர் கருத்தைச் சொல்லி அமைதி அடைந்து விடுவதில்லை. அவர் சென்னையில் நடக்கும் இயக்கத்திற்கு வழிகாட்டி வருகிருர். அவர் மாணவர்களிடம் " கொஞ்சம் பொறுமையாக இருங்கள். மூன்று—நான்கு மாதம் பொறுங்கள். நீங்கள் எதிரிகளை ஆட்டிவைத்துவிட்டீர்கள். மாணவர்களே, இடை இடையே காந்தியடிகள் இயக்கத்தை நிறுத்தியதுபோல நீங்கள் இயக்கத்தைக் கொஞ்ச காலம் நிறுத்துங்கள் " என்று சொன்னர். அவரோடு முழுவதுமாக அரசியல் பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதே இதன் பொருள்; அதை அவரால் பிரிக்க முடியாது.

விஞ்ஞான யுகத்தில் அரசியல் காலம் கடந்த ஒன்று என்பது எனது கருத்து. இந்தக்காலம் விஞ்ஞானம், ஆத்ம ஞானத்தினுடையது, சிறிய—சிறிய மதங்கள், சம்பிரதாயம், அரசியல் ஆகியவற்றினுடையது அல்ல என்று நான் அடிக்கடிச் சொல்லுகிறேன் காஷ்மீர்காரர்கள் என்னிடம் வந்தபோதும் எனது வழி அரசியல் வழி அல்ல என்றே அவர்களிடம் சொன்னேன். அரசியலினல் உலகப் பிரச்னை எதுவும் தீராது, உள் நாட்டுப் பிரச்னையும் முடிவு பெருது என்று சொல்ல விரும்புகிறேன். அரசியலினல் என்ன நடக்கும்? பெர்லின் இரண்டு துண்டு, வியட்நாம், ஜெர்மன், கொரியா, வங்காளம், பஞ்சாப் போன்றவை அனைத்தும் இரு கூருகப் பிரிந்தன. அரசியல் இதைவிட அதிகமான யோசனை

எதையும் சொல்லாது. ஆகையால் நாம் உலக அமை தியை விரும்பினுல், ஒரே உலகம் வேண்டுமென்ருல் அரசியலே விட்டுவிலகி இருக்க் வேண்டும். நான் இந்த பக்தியும் நம்பிக்கையும உடையவன். இராஜாஜி அரசிய லில் முழு நம்பிக்கை வைத்திருப்பவர். இந்நிலேமையில் நானும் அவரும் ஒன்றுபட்டால் சமாதானப் பணி நடை பெறுமென நீங்கள் காத்திருக்கக் கூடாது. இதுதவறு. நானும் நீங்களும் எந்த கொள்கையைச் சேர்ந்தவர்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

கதர் ஊழியர்களும் சாந்திசேனேயும்

தமிழ் நாட்டில் எம்முறையில் வேலே செய்ய வேண் டும் என்பதைப்பற்றி நீங்கள் ஒரு குறிப்பு தயார் செய்தி ருக்கிறீர்கள். ஆனுல் அந்த வேலேயை யார் செய்வது? இங்கிருக்கும் கதர் ஊழியர்கள் அனேவருக்கும் "ஷோ காஸ் நோட்டிஸ்" (Show cause notice) தருகிறேன். நீங்கள் ஏன் சாந்தி சைனிகர்களாகவில்லே, காரணம் கூறுங்கள். தமிழ் நாட்டில் குறைந்த பட்சம் 2000 கதர் ஊழியர்கள் இருப்பார்கள் என்பது என்னுடைய மதிப்பு. இதைத் தவிர பூதானம் முதலிய வேலேகளில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் வேறு இருக்கிருர்கள். ஹிந்தி பிரசாரகர் களும் இருக்கிருர்கள். கம்யூனிஸ்டுகள் செய்வதைப் போல தாங்களும் செய்ய வேண்டுமென்பதை கதர் ஊழி யர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கம்யூனிஸ்டு களுக்கு மூளே இருக்கிறது, கதர்க்காரர்களுக்கு இல்லே. தாங்கள் எங்கிருந்தாலும் கம்யூனிஸ இலக்கியங்களேப் படித்து, கம்யூனிஸ கொள்கைகளின் "செல்" உரு வாக்க வேண்டுமென கம்யூனிஸ்டுகள் அறிந்திருக் கின்றன. இதற்கு அவர்கள் "இன்பில்ட்ரேஷன்" எனப் பெயர் கொடுத்துள்ளனர்

கருத்துப் பிரச்சாரம் குறைவு

கம்யூனிஸ்டுகள் எங்கு சென்றாலும் தங்கள் கொள்கைகளை விளக்குவார்கள் தபால்காரர் வேலைக்குப் போனாலும் கம்யூனிஸ்ட் தபால்காரராகவே இருப்பார்கள். பையில் தமது கொள்கைகள் கொண்ட புத்தகத்தை வைத்துக் கொள்ளுவார்கள். 500 பக்கங்கள் கொண்ட நூலை நான்கணாவிற்கு விற்பனை செய்வார்கள். மீதமெல்லாம் ருசியா உதவி. இப்பொழுதோ சீன உதவியும் கிடைக்கக்கூடும். அவர்களுக்கு இருக்கும் இந்த துணை கதர் ஊழியர்களுக்கு இல்லை. நமது கதர் சத்தியம், அஹிம்சையின் ஆதாரத்தின் மீதானது என்று காந்திஜி அடிக்கடி சொல்லிவந்தார் தமிழ்நாட்டில் படித்தவர்கள் 60 லட்சம்பேர் இருக்கிறார்கள் நீங்கள் வெளியிட்ட நூல்களில் அதிகம் விற்பனையானது "கீதைப் பேருரைகள்". பாக்கி நூல்கள் எல்லாம் 5000–10,000 தான் செலவாகியிருக்கிறது. இது ஏன் ? நம்முடைய இந்த இரண்டாயிரம் ஊழியர்கள் கதர் பிரசாரத்தோடு கருத்துப் பிரசாரகர்களாகவும் ஆகவேண்டும். துறவியின் காவி உடை "துறவியின் தீக்ஷை". இது போன்றே கதர் பாரத ஒருமைப்பாட்டிற்கு தீக்ஷை கதருடையை அணிந்த மார்பினன் அன்பும், கருணையும், சத்தியமும் இதயத்தில் இடம் பெற்றுவிட்டது என்பதை ஏற்றுக் கொண்டு விட்டான் என்பது நமக்குத் தெரிய வேண்டும். நமது கதர் ஊழியர்கள் கதரோடு கூடவே சத்தியம் அஹிம்சையையும் பிரசாரம் செய்ய வேண்டும். கதரில் வேகமிருப்பதாக அப்போதுதான் மதிக்கப்படும். இல்லாவிட்டால் இது எல்லாம் தொழில் முறையில் நடந்ததாகிவிடும். இவ்வளவு மக்களுக்கு வேலை கொடுத்தோம் என்றால் இது ஒரு வேலை கொடுக்கும் சாதனமாக மட்டுமே இருக்கும் இந்தப்பணியில் கதர் ஊழியர்கள், பூதானம்-கிராமதானத்தைச் சேர்ந்தவர்கள்

கஸ்தூரார்பா ஊழியர்கள், ஹிந்தி பிரசாரகர்கள் ஆகிய எல்லோரும் ஒன்றுபட வேண்டுமென்கிறேன். அப்போது தான் இது நடக்கும்.

தவருன பிரசாரத்தின் மாதிரி

"சுயராஜ்யா"வில் ஹிந்தி சம்பந்தமாக ஒரு கார்ட்டூன் (கேலிச்சித்திரம்) வந்திருக்கிறது. அதில் அரக்கனைப் போன்றதொரு மனிதன் வரையப்பட்டுள்ளான். அவன் சாப்பிடுவதற்காக ஓடிக்கொண்டிருக்கிருன். கையில் பெட்ரோல் இருக்கிறது. எதிரில் இரண்டு சகோதரிகள் இருக்கிருர்கள் அவர்களை எரிக்கப் போகிருன். ஒன்று பாரத ஐக்கியம், இன்னென்று ஜனநாயகம். மன்னியுங்கள், அந்தக் கார்ட்டூன் எனக்கு மிகவும் பயங்கரமாக இருந்தது கார்ட்டூன் வேடிக்கையாக இருக்குமென்பது சரி அது ஒரு கருத்து என்பதை நாம் புரிந்து கொள்ளுவதில்லை ஆனல் எப்பொழுது எம்மாதிரி வேடிக்கை செய்வது என்பதையும் தெரிந்து கொள்வது அவசியம். கையில் பெட்ரோலை எடுத்துக்கொண்டு எரிக்கப் போய்க் கொண்டிருக்கிருன் என்பதே இதன் பொருள் என்பது தெளிவு ஆகையால் தமிழ்நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டதாக எண்ணக்கூடாது.

★

மும்மொழியே ஒருமைப் பாட்டுக்கு வழி

கிராம ஒற்றுமையே கிராம முன்னேற்றம்

தற்போதைய நிலைமையைப்பற்றி நீங்கள் எழுதி, யனுப்பி இருக்கிறீர்கள். இன்று அவைகளைப்பற்றி சில சொல்லுகிறேன்.

1. அரசியல் சட்டத்தின் 17-வது ஷரத்து நீக்கப் படவேண்டுமென்பது இராஜாஜியின் கோரிக்கை. தி.மு.க. போன்றவைகளும் இதை ஆதரிக்கின்றன என எண்ணுகிறேன். ஆனல் இது சாத்தியமல்ல. நான்

சொன்ன மூன்று சூத்திரமும் சேர்ந்து ஒரு சூத்திரமாகிறது அதுவே அஹிம்சை-பலாத்காரமின்மை இந்தப் 17-வது ஷரத்து நீக்கப்படுமானல் அது பலாத்காரமாகும்.

நாட்டின் மதிப்பைக் காப்பது 17-வது ஷரத்து

என்னுடைய உண்ணுவிரதத்தினல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட பலனுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள பலன். இல்லாவிட்டால் வட இந்தியாவில் கலவரம் மூண்டிருக்கும் உத்திரப்பிரதேசத்தில், குறிப்பாக இரண்டு இடங்களிலிருந்து எனக்குக் கிடைத்தச் செய்திகளிலிருந்து இது தெரிந்தது. அவர்களும் கலவரம் செய்வதில் குறைந்தவர்களல்ல. கலவரம் செய்வதனல் காரியம் கைகூடுமானல் அவர்களும் அதைச் செய்ய முடியும். ஆனல் இந்த உண்ணுவிரதத்தினல் அவர்கள் இதை நிறுத்தினர்கள். இரு தரப்பினருக்கும் திருப்தி தரக்கூடிய ஒரு நடுநிலையான வழிவகுக்கப்பட்டது. இதனல் ஒரு தரப்பினருக்கு திருப்தி ஏற்படாது; தென்னிந்தியருக்கு இது லாபம் என்பதையும் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்.

சூ-என்-லாய் பாரதம் வந்திருந்தார். பாரதத்திற்கு அவர் ஒரு செய்தியும் விடுத்து விட்டுப் போனர். அது எல்லாம் சீன மொழியில் இருந்தது அவரிடம் நீங்கள், ஆங்கிலத்தில் பேசுங்கள் என்று சொன்னல் "எனக்கு ஆங்கில மொழி தெரியாது" என்று கூறுவார். சீன மொழியை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ளது என எண்ணுகிறேன். பாரதத்திற்காக ஐ. நா. சபையில் ஆங்கிலமே பயன்பட்டால் நமது ஆங்கிலம் எப்பொழுதும் பலஹீனமானதாகவே இருக்கும். நம்முடைய நாட்டில் சரோஜினி நாயுடு இருந்தார். அவர் ஆங்கிலத்தில் கவிதை எழுதினர். பண்டித நேரு வாழ்ந்தார்; ஹிந்தி, உருதுவையும் விடக்கூட மிக நன்ருக அவருக்கு ஆங்கிலம் வந்தது. உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளி

லும் சூழ்நிலை முழுவதும் தாய்மொழியாக மாறும்போது இனிமேல் இப்படிப்பட்டவர்கள் உருவாகமாட்டார்கள்.

நான் உயர் நிலைப்பள்ளியில் படிக்கும்போது என்னுடைய ஆசிரியர்கள் மராட்டி பேசுபவர்கள், நானும் மராட்டி பேசுபவன். ஆனால் யாரும் பதினைந்து நிமிடத்தில் ஒரு மராட்டி வார்த்தைகூடப் பேசமுடிந்ததில்லை. கேள்விகளை ஆங்கிலத்தில் கேட்க வேண்டும். சரித்திரம், பூகோளம், கணக்கு, சமஸ்கிருதம் உட்பட யாவற்றையும் ஆங்கிலத்தில் கற்றுவந்தோம். அப்போது ஆங்கிலச் சூழ்நிலையே இருந்து வந்தது அதை மீண்டும் கொண்டு வர வேண்டுமானால் " வெள்ளையனே வெளியேறு " என நீங்கள் நடத்திய இயக்கத்திற்குப் பதிலாக ' வெள்ளையனே திரும்பிவா " என்று சொல்லுங்கள். மிகச் சிறப்பாக ஆங்கிலம் பேசுபவர்கள் தோன்றமாட்டார்கள் என்பதல்ல ஆனால் அதிலிருந்து சிறந்த அரசியல் நிபுணர்கள் தோனறுவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. ஆகையால் ஆங்கிலமே நமது நாட்டு மொழியாக இருந்தால் உலக அரசியலில் எப்பொழுதுமே மத்திய நிலையில் தான் இருப்போம். பலவகைக் கண்ணோட்டத்தில் சிந்திக்கும்போது, ஆங்கிலம் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நீடிக்கட்டும். ஆனால் 17–வது ஷரத்து நமது நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்கிறது. அதை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் உசிதமெனக் கருதவில்லை.

பொருளை வெளியிடுவதில் வேற்றுமை

ஹிந்தி பேசுபவர்கள் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள், எனது மனமும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. காந்திஜி போதித்ததற்கு இது நேர் எதிர்மாருகப் போய் விடும். திரு. கோபால கிருஷ்ணகோகலே தென் ஆப்பிரிக்கா போயிருந்தார். ஒரு இடத்தில் அவர் பேசுவதாக இருந்தது. அவருடைய தாய்மொழி மராட்டி. ஆனால் எப்

பொழுதும் அவர் மராட்டியில் கொஞ்சநேரம் கூட சொற்பொழிவாற்றியதில்லை. அவர் ஆங்கிலம் நன்ருக அறிந்திருந்தார். ஆனுல் காந்திஜி ஆப்பிரிக்காவில் அவரை வற்புறுத்தி மராட்டியில் பேசவைத்து, அதைத் தான் மொழிபெயர்த்தார். காந்திஜியின் தாய்மொழி குஜராத்தி. கோகலே மராட்டியில் பேசினுர். காந்திஜி அதன் சாரத்தை மக்களுக்கு எடுத்துச் சொன்ஞர்.

அநேக சொற்களோடு கருத்துக்கள் பின்னிக்கிடக்கின்றன என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். சீன மொழியிலுள்ள ஒரு வார்த்தையின் பொருள் தொடர்பு நம்முடைய மொழியின் வார்த்தையோடு ஒத்திருப்பதில்லை. திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி இருக்கிருர். அவர் ஹிந்தி கற்றுக் கொள்ளவில்லை, ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றுகிருர். அவருடைய பக்தர்கள் அவரது சொற்பொழிவு தங்களுக்குப் புரிவதாக நினைக்கிருர்கள். ஆனுல் எனக்குப் புரியவில்லை. ஏனெனில் அவருடைய சொற்களுக்கெனத் தனியான பொருள் இருக்கிறது. " மைண்டு " என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். இதற்கு மனம், அறிவு, சித்தம், அகங்காரம் அல்லது அந்தகரணம் என்பன பொருள்கள். இதில் நான் எதைஎடுத்துக்கொள்வது ? இங்குள்ள சொற்களையே எடுத்துக் கொள்ளுவோம்-"சித்த சுத்தி" "சித்த விருத்தி-நிரோத்". இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு என்ன? நாம் ஆங்கிலத்தையும் நமது மானஸசாத்திரத்தையும் சமமாகக் கருதினுல் ஆங்கில "மைண்டு"ம் (mind) நம்முடையதும்ஒன்ருகிவிடும். ஆனுல் நான் இரண்டையும் சமமாக மதிக்கவில்லை. நான் ஏன் மதிக்கவில்லை என்பதற்கு இதைப் பாருங்கள் (படம் ஒன்றைக்காட்டி) இது என்னுடைய மொழி (இரண்டாவதைக் காட்டி) இது அவர்களுடைய மொழி. படம் ஒன்றிலுள்ள ஒவ்வொரு பகுதியும் என்னுடைய மொழியின் ஒவ்வொரு சொற்கள்; இரண்டாவது படத்தின் ஒவ்வொரு பகுதியும்

அவர்களது மொழியின் ஒவ்வொரு சொற்கள். இவை இரண்டும் வட்ட வடிவமாக இருந்தாலும் இவை இரண்டின் பகுதிகளும் ஒன்று மற்றதனோடு ஒத்திருக்கவில்லை ஆகையால் நாம் நமது கருத்துக்களை நமது மொழிச் சொற்களினால்தான் சரியாக வெளியிட முடியும்.

சில உதாரணங்கள்

விஞ்ஞானத்தின் விஷயம் வேறு. விஞ்ஞானத்தில் ஹைடிரஜன் என்பதற்கு "உத்ஜன்" என்ற புதிய சொல் உருவானால் வித்தியாசமொன்றும் இல்லை. இரண்டும் ஒன்றுதான். கணிதத்திலும் வித்தியாசமொன்றும் இருக்காது. நமது மொழியிலுள்ள 4ம் ஆங்கிலத்திலுள்ள 4ம் ஒன்றுதான். ஆனால் யாரேனும் மனமும் "மைண்டும்" ஒன்று என்று சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

"தர்மம்" என்பதற்கு ஆங்கிலத்தில் என்ன சொல்லுவீர்கள்? "டியூடி", "ரிலிஜன்", "சேரிட்டி", அல்லது "ரைடியஸ்னஸ்"? இவைகளில் வித்தியாசமிருக்கிறது. இவ்வாறு நாம் அரசியலுக்கும், சமூக இயலுக்கும் ஆங்கிலத்தைச் சார்ந்திருந்தால் எப்பொழுதும் நாம் சிந்திக்கும் முறை பிரமை நிறைந்ததாகவே இருக்கும்.

அரவிந்தருடைய விஷயம் தனி. அவரைப் போன்ற ஆங்கில அறிவைப் பெற நீங்கள் உங்கள் தாய்மொழியையே மறக்கவேண்டும், அப்போதுதான் ஆங்கிலம் வரும். ஆனால் இதை நாம் செய்யமாட்டோம். ஆகையால்தான் இதில் ஆபத்து இருக்கிறது என நான் எண்ணுகிறேன். ஆங்கிலேயர், அமெரிக்கர்களுடன் பேசும்பொழுது நாம் கருத்துக்களை வெளிப்படுத்தும் முறை தவருகவே இருக்கும். ஆகையால் நாம் எப்பொழுதும் நமது சிந்தனையில் வாழவேண்டும் சிந்தனை ஒருபோதும் வார்த்தையை விட்டுப் பிரிந்து இருக்காது.

" கோரலேஷன் " என்பதற்கு "சமவாய் " என்ற புதிய சொல்லை நான் உருவாக்கியிருக்கிறேன். நமது புதிய கல்வித்திட்ட முறைக்கு " சமவாய் " என்றே பெயர். இதற்காக டில்லியில் ஒரு கமிட்டி கூடியது. அதில் டாக்டர் ஜாகீர் ஹுசேன் போன்றவர்கள் இருந் தனர். ஆங்கிலத்தில் விவாதம் நடந்தது. அப்பொழுது கோரலேஷன் என்ற சொல் வந்தது. இது எனக்குத் தெரியாது என்று சொன்னேன். எனக்கு " சமவாய் " என்பது தெரியும்; இதற்கு ஆங்கிலத்தில் என்ன சொல் லுகிறார்கள் என்பது தெரியாது. " கோரலேஷன் " என்ப தற்கு மராட்டி, ஹிந்தி, குஜராத்தி போன்றவைகளிலும் பொருள் தெரியாது. ஆனால் " சமவாய் " என்பது தெரியும். ஏனெனில் இது என்னுடைய முறை, வெளி யிலிருந்து வரவில்லை. சமவாய் என்பதற்கு ஆங்கில வார்த்தை சொல்ல முடியாவிட்டால் அதன் பொருளையா வது விளக்குங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். நான் அதைப்பற்றி ஒரு நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தி னேன்.

மண்ணால் குடம் செய்யப்பட்டிருக்கிறது. மண்ணும் குடமும் தனித்தனியா அல்லது ஒன்று? நீங்கள் தனித் தனி என்று சொன்னால் என்னுடைய மண்ணை எனக்குக் கொடுத்துவிடுங்கள்; உங்கள் குடத்தை நீங்கள் எடுத் துக் கொள்ளுங்கள் என்பேன். இரண்டும் ஒன்று என் பீர்களானால் முன்னால் கிடக்கிறது மண். அதை எடுத்துப் போய் தண்ணீர் நிரப்புங்கள் என்று சொல்லுவேன். இரண்டையும் ஒன்று என்றும் சொல்ல முடியாது. தனித் தனியென்றும் சொல்லமுடியாததைப் போல ஞானத்தை யும் கர்மத்தையும் ஒன்று என்றும் சொல்ல முடியாது, தனித்தனி எனவும் கொள்ள முடியாது. இதுவே "சமவாய்" என்பது. இதற்கு ஏதேனும் ஆங்கிலச் சொல் இருக்கும்; எனக்கு ஆங்கிலம் எங்கே வருகிறது ?

கொஞ்ச நாட்களுக்கு முன்பு மத்திய கல்வி அமைச்சர் திரு. சாக்ளா என்னை சந்திக்க வந்திருந்தார். " நீங்கள் பாரதத்தின் எல்லா மொழிகளையும் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்கு கஷ்டம் ஏதுமில்லை " என்று சொன்ஞர். " எல்லாம் தெரியும்; ஆனுல் ஒன்றிலும் நிபுணனல்ல " என நான் அவருக்கு பதில் எழுதிக் காட்டினேன். ஆனுல் எனக்கு சமஸ்கிருதம் தெரியும்.

ஆகையால் ஜே. கிருஷ்ணமூர்த்தியின் பேச்சை மக்கள் எப்படிப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்பது தெரியவில்லை. அவர்களுக்குப் புரியும் என்று அவர் கருதியிருக்கலாம். அரவிந்தருடைய ஒவ்வொரு வாக்கியத்தையும் " லைப் டிவைன் " (Life Divine) லிருந்து எடுங்கள். வாக்கியங்கள், பொருள் புரிந்து கொள்ளுவது கடினமாக இருக்குமளவு மிகவும் நீண்டதாக இருக்கும். விவேகானந்தருடைய ஆங்கிலம் சுலபமானது. பைபிளின் ஆங்கிலமும் சுலபமானது. ஆனுல் வேதாந்திகளின் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளுபவர்களுக்கு நான் " மகாவீர சக்கரம் " எனது சார்பாக கொடுப்பேன். இதைப்போன்றே இராமானுஜருடைய சமஸ்கிருத வாக்கியங்களைப் படிக்கும் போது 4–5 முறை மூச்சு வாங்குகிறது. சங்கரருடைய வாக்கியம் 4–5 வார்த்தைகள் கொண்டது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருமுறை இருக்கிறது. ஆங்கிலத்தில் வேதாந்த-சமூக வார்த்தைகளைப் படித்தால் அது புரிவது போலத் தோன்றுமென்றே கொள்ளவேண்டும். உண்மையில் நாம் அவர்களைப் புரிந்து கொள்ளுவதில்லை. ஆனுல் இது கணிதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் பொருந்தாது.

நீங்கள் எழுதியிருக்கும் மீதமுள்ள விஷயங்கள், பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது விசாரணை, வழக்குகளை வாபஸ் பெறுவது, அவர்களது குடும்பத்தினருக்கு உதவி புரிவது ஆகியவற்றில் நான் தலையிடவிரும்ப

வில்லை. இவைகளை யெல்லாம் அங்கிருக்கும் அரசாங்கம் பார்த்துக் கொள்ளும்.

தமிழ்நாட்டில் நீதிமன்றம், கல்விமுதலிய துறைகளில் தமிழ்மொழிக்கு உரிய இடம் கிடைக்க நீங்கள் சில வேலைத்திட்டம் வகுத்திருக்கிறீர்கள். திரு. எஸ் ஆர். சுப்பிரமணியம் உண்ணுவிரதமிருப்பார். நான் இந்த நீண்ட அல்லது குறுகிய உண்ணுவிரதத்திற்கு உதவியாளனில்லை. இது மொழியின் முன்னேற்றத்தைப் பற்றிய விஷயம். ஹிந்தியில் அலுவல்கள் நடைபெறவேண்டுமென்கிறோம். ஆனால் ஹிந்திபேசும் மாநிலங்களில் கூட ஹிந்தியில் அலுவல்கள் நடைபெறவில்லை இதற்கு மொழியில் முன்னேற்றம் அவசியம். நமக்கு ஆங்கிலத்தில் சிந்திக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. பின்னர் நாம் இதை மொழி பெயர்க்கும் போது இதில் தோல்வியடைகிறோம். நாம் நமது அரசியல் சட்டத்தை சமஸ்கிருதத்தில் இயற்றி இருந்தால் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது கஷ்டமாகிவிடும். ஆனால் நீங்கள் அதை ஆங்கிலத்தில் இயற்றியிருக்கிறீர்கள்.

ஒரு சொல் இன்னொரு சொல்லோடு ஒத்திருப்பதில்லை. ஆகையால் நீங்கள் உண்ணுவிரதம் இருப்பதால் ஒன்றும் நடந்துவிடாது. இதற்கு ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும்; தாய்மொழியிலேயே சிந்திக்க நீங்கள் பழகவேண்டும். இன்று கலைச் சொற்கள் பல்கிப் பெருகிவிட்டன. இவையெல்லாம் ஆங்கிலத்தில் உள்ளன. இவைகளைத் தாய்மொழியில் கொண்டுவர ஓராண்டு-ஈராண்டாகிவிடும். இதற்கிடையில் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். மற்ற மாநிலங்களோடும் ஆலோசனை செய்ய வேண்டியிருக்கும். கன்னடக்காரர்களின் சொற்கள் ஒத்துள்ளன என வைத்துக் கொள்ளுங்கள், நல்லது, உதவியாக இருக்கும். இல்லாவிட்டால் இதனால் அண்மையில் இருப்பவர்களுக்கும் கஷ்டம் ஏற்படும்.

ஆகையால் இதைச் சேர்ந்து செய்ய வேண்டும். இந்த வேலையை சிந்தனை-விவாதம் மூலமே செய்யமுடியும். மசோதாவே இல்லை, விவாதமே நடக்கவில்லை என்றால் உண்ணாவிரதமிருக்கலாம். தமிழுக்கு இதற்கான ஆற்றல் இல்லை என்று அரசாங்கம் சொல்லுமானால் இதனால் அலுவல்களை நடத்த முடியாது எனக் கூறுமானால் சத்தியாக்கிரகம் செய்யலாம். ஆனால் அரசு மொழியை மதிக்கிறது என்றால் கொஞ்சம் பொறுமையாக இருந்து அதற்கு அவகாசம் தரவேண்டும். அதன் கண்ணியத்தில் நம்பிக்கை வேண்டும்.

ஹிந்தி "கங்கை" அல்ல "கடல்"

எனது தாய்மொழி மராட்டியாக இருப்பதால் நான் பல முறை ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஹிந்தி பேசும் பொழுது முன்னால் இருப்பவர்கள் சமஸ்கிருதத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கிறேன். சமஸ்கிருதம் புரிந்தவர்கள் இருந்தால் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்துகிறேன். இவ்வாறு என்னுடைய சொற்பொழிவு முழுவதையும் ஹிந்தியிலேயே நிகழ்த்தியிருக்கிறேன். சிற்சில சமயங்களில் மராட்டிய சொற்களையும் கலந்து விடுகிறேன். அப்போது அது தேசிய மொழி ஹிந்தி ஆகிறது; கலப்புமொழியாகிறது. நான் ஹிந்தி பேசுபவர்களிடம் "நீங்கள் ஹிந்தியை கங்கையாக வைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா அல்லது யமுனையாக வைத்துக்கொள்ளுகிறீர்களா? கங்கையாக வைத்துக் கொள்ள விரும்பினால் தூய்மையான தண்ணீர் வேண்டும். அப்போது அது தேசிய மொழியாக முடியாது. நீங்கள் ஹிந்தியை தேசிய மொழியாக்க விரும்பினால் அந்த ஹிந்தி கடல்போன்று தான் இருக்கும். கடல் நீர் உப்பானது" என்று கூறுகிறேன்.

நான் கொஞ்சம் ஹிந்தி பேசிவிடுகிறேன். ஆனால் காந்திஜியும், சர்தார் பட்டேலும் ஹிந்தியில் பேசும்

பொழுது அநேக குஜராத்தி சொற்கள் பழக்கத்திற்கு வந்துவிட்டன. மராட்டியிலும் குடியானவன் என்பதற்கு "கேடத்" என்னும் சொல் வருகிறது. அது குஜராத்தி சொல் இதனால் நமக்கு என்ன கெட்டு விட்டது. தமிழ் மொழி அகராதியில் "பாத்" என்ற சொல் இருப்பதைப் பார்த்தேன். இது மராட்டியச் சொல். இவ்வாறு ஏதாவது சொற்கள் வந்துவிட்டால் அதனால் என்ன தவறு? மொழி வளர்ச்சியடையும் இம்மாதிரியான உண்ணாவிரதத்துக்கு மதிப்பில்லை. இவ்வாறு உண்ணாவிரத ஆயுதத்தைப் பயன்படுத்தக்கூடாது. விசேஷ சந்தர்ப்பத்தில்தான் ஆயுதத்தைப் பயன் படுத்த வேண்டும்

மும்மொழித் திட்டம் வடக்குக்கும் சுமையல்ல

இன்னொரு விஷயமும் முன்னால் வந்தது. வட இந்தியாவின் மீது நான்கு மொழிகளை ஏன் சுமத்தவேண்டும் என்றதொரு கருத்தும் நிலவியது. இது வீண வேலை என்று தென்னிந்திய மக்களே சொல்லுகிறார்கள். வட இந்தியா, மூன்றாவதாக தென்னிந்திய மொழியைக் கற்க வேண்டுமென்று சொல்லுவது சுமையாக இருக்கும் என்கின்றனர். நம்முடைய நாடு மிகவும் பெரியது. இவ்வளவு மொழிகளையும் ஒன்றாக வைக்கவேண்டும். ஆனால் இங்கு கூட்டுக் குடும்பம் இருக்கிறது. இது நம்முடைய நாட்டின் அதிர்ஷ்டம். கல்வியில் அநேக மொழிகளைக் கற்கவேண்டுமென்பதை இங்கிலாந்தைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் பிரெஞ்ச், ஜெர்மன், கிரேக்கம், ருஷியமொழி ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஐரோப்பாவின் சமஸ்டி ஒன்றுமில்லாவிட்டாலும், அந்தக் கண்டத்தின் ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று விதித்திருக்கின்றனர். இது தூரதரிசனம். பாரதம் நமது நாடு. ஆகையால் நாம் இதை ஒரு சுமையாகக் கருதக்கூடாது.

இதனுல் என்ன உபயோகம் என்று சிலர் கேட்கிருர்கள். மனதில் கருணை வளரும்; எதிர் காலத்தில் அம்மொழிகளை நன்கு கற்ற சிலர் வெளிப்படுவார்கள். பிறகு இங்குள்ள இலக்கியம் அங்கும், அங்குள்ளவை இங்கும் போகும். ஹிந்தி பேசுபவர்கள்மீது தமிழை ஏன் சுமத்துகிறீர்கள் என்று தமிழர்கள் சொல்லுகிருர்கள். இது உபயோகமற்றது என்பது அவர்கள் கருத்து. “ஏன் அழுகிறீர்கள் ? வட இந்திய மக்கள் தமிழைக் கற்றுக் கொண்டால் அதனுல் உங்களுக்கு என்ன கெட்டு போகிறது ? இது நல்லது தானே” என்று நான் சொல்லுகிறேன். இவ்வாறு ஒரு மொழியினுடைய ஆனந்தம் இன்னெரு மொழியில் இடம் பெருவிட்டால் இதயம் விசாலமடையாது. பாரத நாகரீகத்திற்கு உயர்வளிக்கக்கூடிய விசேஷம் தமிழில் இருக்கிறது என்பதை நான் அறிவேன்.

குறளை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் விஷயங்கள் தெளிவாக்கப்பட்டிருக்கும் முறையைப் போல சமஸ்கிருதத்தில் காணமுடியாது. “சுக்நீதி” போன்ற சில நூல்கள் இருந்தாலும் அவைகளின் முறைதனியானது. இயேசுவின் மலைப்பிரசங்கத் (Sermon on the Mount) தைப்போல இதற்கென தனியானதொரு சுதந்திரமான முறை, விசேஷமிருக்கிறது. மகாபாரதத்தில் இம்முறையைக் காணமுடியாது. உபநிடத்துக்கென ஒரு முறை இருக்கிறது. அம்மாதிரியான நூல் உலகில் இல்லை. தம் தம் மொழிகளில் இவ்வாறு பல பொருள்கள் இருக்கின்றன. தமிழ் மொழியில் குறளுக்கென ஒரு தனி நடை இருக்கிறது. இதை வட இந்தியர் கற்றுக் கொண்டால் நல்லது. “உயர்ந்ததை உலகமனைத்துக்கும் கொடுப்போம் என்ற வீண்கர்வம் எனக்கில்லை. உலகிற்குக் கொடுத்து விட்டேன்” என பாரதியார் எழுதியிருக்கிருர்.

இவ்வாறு சில கன்னடத்திலும் இருக்கின்றன. வசவேஸ்வர் சமுதாய சீர்திருத்தம் சம்பந்தமாக எழுதியவை உரை நடையில் இருக்கின்றன. அவை உயர்ந்த உரைநடையாகும் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கன்னடமொழியில் அவர் உரைநடை எழுதினர் என்பது பெரிய விஷயம் இது வட இந்தியாவிற்குப் போனுல் பரஸ்பரம் அன்பு வளரும், இதயம் விசாலமடையும். மும்மொழிச் சூத்திரத்தைப் பெரியதாக மதிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் வட இந்தியாவிடம், நீங்கள் அவசியம் தென்னிந்திய மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றே கூறுவேன்.

நமது பணியைச் செய்வோம்

தமிழ் நாட்டில் நடந்த கலவரம், குழப்பம் ஆகியவைத் தொடர்பாக போலீஸ் எடுத்துக்கொண்ட நடவடிக்கை சுடுவது. இது நல்லதல்ல. ஆனல் அரசாங்கத்திடம் வேறு சக்தியும் இல்லை. ஆகையால் அரசாங்கம் சுடுகிறது. நமது மும்முனைத் திட்டங்களான—கிராம தானம், சாந்திசேனை, கிராமீயக்கதர் ஆகியவற்றை விட்டு விட்டு, ஊழியர்கள் மொழிப் பிரச்னையை மக்களுக்கு விளக்கிச் சென்ருலே அது இதற்கு எதிர் நடவடிக்கையாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். "யானை தன் போக்கில் தான் போகும்" என்று கபீர் தாசர் எழுதியிருக்கிருர். அவ்வாறு நீங்கள் போனுல், காந்தி மாணவர் இல்லம் நிறுவுதல், இங்கு இன்று நடப்பதை விளக்கிச் சொல்லுதல் போன்றவைகளைச் செய்ய வேண்டும். அதிகமாக எண்ணிக் கொள்ளக்கூடாது. நம்முடைய வேலைத் திட்டத்தை எடுத்துக்கொண்டு போகவேண்டும். ஒன்றும் நடக்கவில்லை என்ற முறையிலேயே வேலை நடக்கும். நமது இடத்தில் விழிப்புடன் இருப்பது அவசியம். நிர்மாண வேலையில் வகுப்புப்

பிரிவு இல்லை. சூழ்நிலைக்கேற்ப விஷயங்களை விளக்கி, நிலைமையை சாந்தமாக்கிவிட்டு நமதுவேலைத்திட்டத்தை எடுத்துப் போவது அவசியம்.

நான் காஷ்மீர் போயிருந்தபோது பெரிய வெள்ளம் வந்தது. கடந்த நூறு ஆண்டுகளில் இம்மாதிரி வெள்ளம் வந்ததில்லை. வெள்ளம் பிரளயம் ஏற்பட்டதுபோல் இருந்தது. " இந்த வெள்ளம் ஏழை-பணக்காரர் என்ற வித்தியாசம் பாராட்டவில்லை. நீங்கள் மட்டும் ஏன் வேறுபாடு கற்பிக்கிறீர்கள் ? வெள்ளத்தை நீங்கள் எதிர்த்து நிற்கவேண்டும் என்னும்போது இவருடைய வயல், அவருடைய வயல் என்றப் பாகுபாடு ஏன் ? கிராமம் முழுவதையும் கிராமதானம் செய்துவிட்டால் எல்லாம் நடந்துவிடும் " என்று நான் என்னுடைய சொற்பொழிவுகளில் சொல்ல ஆரம்பித்தேன். நான் என்னுடைய கருத்தைக் கைவிடமாட்டேன். அது அடிப்படை வரைப் போகிறது என்று எனக்குத் தெரியும். இது சம்பந்தமாக நாம் கம்யூனிஸ்டுகளிடம் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் உலகம் முழுவதும், தற்போதும் நிலவி வரும் பிரச்னைகள் பொருளாதார சம்பந்தப்பட்டவை, மீதமெல்லாம் அதனோடு வருபவை என்பதை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். மொழிப் பிரச்னையை நோக்கினோமானால் அதிலும் பொருளாதார தத்துவம் இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் தங்கள் உறுதியையும், ஆயுதத்தையும் சுருத்தால் விடுவதில்லை. நாமும் அழிவுவேலைகளில் ஈடுபட்டு, நமது அடிப்படை வேலைத் திட்டத்தினின்றும் விலகிப்போய்விட்டால் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு விடுவோம். ஆகையால் நாம் அமைதிப் பணிகளைச் செய்யவேண்டும்.

யுத்தம் வந்தால் உங்கள் ஐந்தாண்டு திட்டங்கள் நடைபெறாது; ஆனால் கிராமதானம் நடக்கும். சீனாவோடு யுத்தம் நடக்கிறது என்றால், கிராமம் ஒன்றாக

வேண்டும் அப்போதுதான் அது பிழைக்கும், ஆகையால் கிராமதானம் செய்யுங்கள் என்று நான் சொல்லுவேன். சீன ஆக்கிரமிப்பினால் எனக்கு சுலப கிராம தானக் கருத்து தோன்றியது. தற்போது ஆயிரக்கணக்கில் கிராமதானங்கள் விரைவாக ஏற்பட வேண்டும். மெதுவாகத்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறதே! அவசரம் ஏன்? ஏனெனில் நாம் இங்கிருக்கும் ஏழ்மையை எதிர்க்க வேண்டும். சர்வோதயம் மலரச்செய்ய வேண்டும். சர்வோதயத்திற்கு முன்னால் உலகத்தில் ஒரு கருத்து இருக்கிறது என்றால் அது கம்யூனிஸம்தான். நாம் ஏழ்மையைப் போக்குவோம் என அறைகூவி அழைக்கிறேன்

"ஏழை எப்பொழுதும் உனக்கு உதவியாளன்" (The poor is always with you) என்றுபைபிளில் ஒருவாக்கியம் வருகிறது "ஏழ்மை எப்பொழுதும் இருக்க வேண்டும்; நாம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற நிலை ஏன்? ஏழ்மையையே போக்குவோம்" என்கின்றனர் கம்யூனிஸ்டுகள். ஆகையால் அவர்கள் தங்கள் வேலைத்திட்டத்தை 'ஏழ்மையைப் போக்குவது' என்று சொல்லுகிறார்கள். இதற்கு பதில் சொல்லும் வகையில் ஒரு 'மிஷனரி' ஏற்பட்டது. அது என்னுடன் பேசும் பொழுது "ஏழ்மையைப் போக்கும் வேலை எங்களுடையது-கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுடையது" என்று சொல்லியது. இதைக் கம்யூனிஸ்டுகள் செய்தால், நம்மைவிடச் சிறந்த கிறிஸ்துவர்களாகிறார்கள் (They are more Christian than us). ஆகையால் அதன் கருத்து கருணை அடிப்படையிலமைந்தது. நான் அவர்களிடம் "உங்கள் கருத்தில் கருணை இருக்கிறது. ஆனால் அது விஞ்ஞானரீதியானதல்ல ஏனெனில் நீங்கள் மக்கள் சக்தியை உருவாக்குவதில்லை. ஹிம்சை மூலமாக பணிபுரிய விரும்புகிறீர்கள். ஹிம்சை மக்கள் சக்தியல்ல,

வர்க்க சக்தி. ஹிம்சை மூலமாக புரட்சி சக்தியை உரு வாக்குகின்ற வரையில் மக்கள் சக்தி உதயமாகாது. ஆகையால் நீங்கள் உங்கள் சக்தியை மாற்றிக் கொள் ளுங்கள். ஆனால் நீங்கள் அதை மாற்றமுடியாது ஏனெ னில் சத்தியத்தை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை'' என்று சொல்லுகிறேன்.

சூழ்நிலையால் பயன் பெறுவோம்

சூழ்நிலையைப் பயன்படுத்தி பலன் பெறவேண்டும். வாலிபமகன் இறந்துவிட்டான். துக்கப்பட வேண்டிய விஷயம். ஆனால் இம்மாதிரி சந்தர்ப்பத்தில் அவசியம் தானம் செய்யவேண்டும் என்று சொன்னேன். நண்பர் ஒருவர் இருந்தார். அவர் திருமணம் செய்தார். திருமணம் செய்கிறீர்கள், தானம் செய்ய வேண்டாமா என்று கேட் டேன். பிள்ளை பிறந்திருக்கிறது, ஆசீர்வாதம் செய்ய வேண்டுமென்று ஒருவர் கேட்டார் 'இலவச ஆசீர் வாதத்தை விருப்புகிறீர்களா? தானம் கொடுங்கள் மனி தனைக் காப்பாற்றுவது இது ஒன்றே. இது முற்றிலும் அடிப்படையானது'' என்றேன். ஆகையால் நமது அடிப்படையான பரிசோதனை முக்கியமான வழியில் நடக்க வேண்டும். 'இதயத்து உள்ளிருந்து' என்பது எவ்வளவு அழகான சொல்! இம்மாதிரியான சொற்கள் நமது பாரதீய மொழிகளில் இருக்கின்றன. இந்த சொல்லை சைவர்களோ வைணவர்களோ உருவாக்க வில்லை; ஜைனர், பௌத்தர், கிறிஸ்தவர்களும் உரு வாக்கவில்லை. இது ஒரு தார்மீக வழியிலான சொல். ஒவ்வொரு இடத்திலும் இதுபோல பல சிறப்புகள் உள் ளன. நமது கலாச்சாரத்தில் இத்தகைய சிறப்புகள் இருக்கின்றன என்பதை நாம் கிராம மக்களுக்கு எடுத் துச் சொல்ல வேண்டும். இது நம்முடைய பாரதப் பண் பாட்டின் விசேஷம். மெஜாரிட்டி, மைனாரிட்டி என்பது நமது பண்பாடல்ல. இதனால் கிராமந்தோறும் அரசி

யல் புகுந்து, வெளிப்படையாக சண்டை ஆரம்பமாகி விடும். இதை நாம் வங்காளத்திலும், மகாராஷ்டிரத்திலும் பார்த்தோம். " கிராமதானத்தில் ஒத்துழைப்பு எப்படி ஏற்படும் " என அங்கு மக்கள் கேட்டனர். இது ஒரு பிரச்னையாகி விட்டது. ஒரு சிறிய கிராமத்தில் என்னை வரவேற்பதற்காக இரண்டு வரவேற்பு குழுக்கள் அமைக்கப்பட்டன. இதனால் கிராமத்தில் ஒரு வேலையும் நடக்காது. கட்சி அரசியல் சட்டமன்றத்தில் வேண்டுமானால் இருக்கலாம். கிராமத்தில் ஒற்றுமைதான் இருக்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு கிராமமும் வாழும். இந்தக் கட்சிக்காரர்களால் நமக்கு லாபமில்லை என்பதை கிராமத்தவர்களும் புரிந்து கொண்டுவிட்டார்கள்.

" உங்கள் கிராமத்திற்கு எப்போதாவது யாரேனும் வருவார்களா ? " என ஒரு தடவை தமிழ்நாட்டில் ஒரு கிராமத்தில் கேட்டேன். " இல்லை. யாரும் வருவதில்லை. நீங்கள்தான் வந்திருக்கிறீர்கள் " என்று பதில் சொன்னார்கள் " தேர்தலில் நிற்பவர்கள் வருவதில்லையா ? " என்று கேட்டேன். " ஆமாம், வருகிறார்கள். ஒருமுறை எங்கள் கிராமத்தில் தேர்தல் நடந்தது. மூன்று பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் மூன்றிலும் சீட்டைப் போட்டோம். ஆனாலும் எங்களுக்கு பலனொன்றும் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள் இந்த மூன்று பெட்டிகளையும் அவர்கள் சிவபெருமான், விஷ்ணு பெருமான், பிர்மா என்று எண்ணிவிட்டார்கள்.

நாம் கிராமத்தவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். நம்முடைய ஒற்றுமை குலைந்தால் நமக்கு வேறு ஆதாரமே இருக்காது என்பதை அவர்களும் அறிந்திருக்கிறார்கள். இது மிகப் பெரிய கருத்து. நாம் கிராம ஒற்றுமையை விரும்புகிறோம் என்பதை கிராம மக்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

(பவனார், பிரம்ம வித்யாமந்திர் 17—3—65.)

பாரதப் பேரகராதி வேண்டும்

என்னுடைய உண்ணுவிரதத்தைப்பற்றி இங்குள்ள பத்திரிகைகளில் சரியான செய்திகள் வெளிவரவில்லை என்று தெரிவித்திருக்கிறீர்கள். இது எனக்கு ஆச்சர்ய மாக இருந்தது காந்தியடிகளுக்கும் இம்மாதிரியான அனுபவம் ஏற்பட்டது. அவருடைய உண்ணுவிரதத்தைப் பற்றியும் பல தவருன செய்திகள் பாரதம் முழுவதும் பரப்பப்பட்டன. அந்த விகிதத்தில் பார்க்கும் பொழுது என்னைப்பற்றி அவ்வளவு தப்பெண்ணம் ஏற்படவில்லை. பத்திரிகைகளில் நிறைய ஒருதலைபட்சமான செய்திகள் வருகின்றன. பாரத பத்திரிகைகளில் வரும் செய்தி களுக்கு நேர் எதிரான செய்திகள் பாகிஸ்தான் பத்திரி கைகளில் வெளிவருகின்றன. அந்தந்த பத்திரிக்கை களைப் படிப்பவர்களுக்கு அச்செய்திகள் வேதவாக்காக இருக்கின்றன.

குடிலில் இருந்து காந்தியடிகளின் சிலையை அகற்றி னுர்கள். கதர் வஸ்திராலயங்கள் மீது கற்களை வீசினுர் கள், தீவைத்தார்கள். ஏனென்ருல் அவர்கள் ஹிந்திக்கு ஆதரவாக இருக்கிருர்கள் என்று இதில் செய்தி வந்தி ருக்கிறது. உருவச் சிலைகளைப் பற்றிப் பேசும்போது ஒரு தடவை, யாருக்கும் சிலை வைக்கக் கூடாது, ஏனெனில் அதை அகற்றும் சந்தர்ப்பமும் வரவேண்டாம் என்று சொன்னேன். இது உலகம் முழுவதும் நடைபெறு கிறது. ஒரு காலத்தில் ஸ்டாலினுக்கு எவ்வளவு மதிப்பு இருந்தது? இப்பொழுதோ அவருடைய கல்லறையையும் தோண்டி வேறு இடத்துக்குக் கொண்டுபோய் விட்டார் கள். காந்திஜி விஷயத்திலாவது சரி. ஆனுல் அரவிந்தர் ஆசிரமம் என்ன செய்தது ? அது புரிந்த குற்றம் என்ன ? எனக்கு இது கொஞ்சம்கூட விளங்கவில்லை. காந்திஜி ஹிந்தியை ஆதரித்தார் என்பது வேண்டுமானுல் குற்ற

மாக இருக்கலாம். ஆனால் அரவிந்தர் தான் எழுதியதை எல்லாம் ஆங்கிலத்தில் எழுதினர். அவர் வங்காளியில் சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் அவை வங்கமொழி யில் அச்சாகியுள்ளன பாக்கிஎல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. இறுதியில் அவர் ஒரு மகாகாவியம் எழு தினர். அதன் பெயர் 'சாவித்திரி' ஆங்கில இலக்கியத் திற்கு இது அவருடைய காணிக்கை

மக்கள் எவ்வாறு ஒழுகிவருகிறார்கள் என்பது ஒரு சுதந்திரமான மனோசாத்திரம் நான் மகாராஷ்டிரத்தில் யாத்திரை செய்த பொழுது என்னைப்பற்றி அங்கு அதிக மான தப்பெண்ணம் உண்டாகியிருந்தது. 'நிபாணி'ல் நான் சத்தியாக்கிரகம் செய்யவேண்டியிருந்தது குண் டாச்சாரை கன்னடத்தில் பேசவும் அவர்கள்விடவில்லை. நான் எல்லைப் பகுதியில் இருக்கும்போது கர்நாடகத்தின் அந்த மாவட்டங்களில் நடந்த வேலை விபரத்தை குண் டாச்சார் எனக்குச் சொல்ல விரும்பினர். இதை கன்ன டத்தில் சொல்ல அங்கிருந்தவர்கள் அவரை விடவில்லை. நிபாணி மகாராஷ்டிரத்தில்தான் இருக்க வேண்டுமென் பது அவர்களுடைய கோரிக்கை. நீங்கள் அவருடைய கன்னடத்தைக் கேட்டால்தான் நான் பேசுவேன் என்று சொன்னேன். நான் இவ்வாறு சொன்னபிறகு அவர் கள் குண்டாச்சார் சொன்னதைக் கேட்டார்கள். எனக்கு வங்காளத்திலும் மகாராஷ்டிரத்திலும் எனக்குக் கொஞ் சம் அனுபவம் ஏற்பட்டது.

பைபிளில் " Woe unto you when all speak well of you " என்று ஒரு வாக்கியம் வருகிறது. எல்லோரும் நல்லதே பேசினலும் ஆபத்துதான். மொத்தத்தில் பாரதமக்கள் நம்மை சோதித்து தெரிந்து கொள்ள வில்லை என்றே சொல்லவேண்டும். ஒரு புதிய கருத்து உதயமாகும் போது கொள்கையில் பற்றுடைய ஒழுக்க

சீலர்களான ஊழியர்கள் அதற்கா சுற்ற ஆரம்பிக்கிறார் கள்-How beautiful are the feet of Those-கடவுளின் செய்தியை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பவர்களின் பாதங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன என்பது பைபிளின் வாக்கு.

ஒரு புதிய கருத்தைச் சுமந்து கொண்டு புத்தர் பெருமான் கிளம்பினார். மக்களிடம் புதிய கருத்து வந்தவுடன் ஆயிரக்கணக்கானவர்கள் அதற்காக சுற்ற ஆரம்பித்தனர். மகாவீரருக்குப் பின்பும் இத்தகைய நிலைமை ஏற்பட்டது. கிறிஸ்து-முகம்மதுவுக்குப் பின்னரும் நிகழ்ந்தவை இதே. இப்பொழுது பாரதத்திலும் உலகத்திலும் ஒரு புதிய கருத்து தோன்றியுள்ளது சித்தாந்த ரீதியில் இது புதியது அல்ல, சித்தாந்தம் எப்பொழுதும் பழையனவே. சமாதானம், அன்பு ஆகிய முறைகளினால் உலகின் மிகப்பெரிய பிரச்னைகளையும் தீர்க்க வேண்டும். தீமையை நன்மையால் வெல்ல வேண்டும். சமுதாய ரீதியாகப் பார்க்கும்போது இந்தவிஷயம் புதியது. "தீமையை நன்மையால் எதிர்" என்றார் இயேசு பெருமான் "Resist not evil" (தீமையை எதிர்க்காதே) என்றுகூட சொல்லிவிட்டார். "சாந்தத்தினால் கோபத்தை வெற்றிகொள்" என்றார் புத்தர். சொன்னவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் இதை நடத்திக்காட்டினார்கள் சமுதாயம் என்று வந்தபொழுது அந்தக்காலத்திலும் பிரிவினை ஏற்பட்டுவிட்டது. சீஸருக்குக் கொடுக்க வேண்டுமானால் கொடுக்கத்தான் வேண்டும். செயின்ட் பால் போன்றவர்களும் அரசரை மதிக்க வேண்டும் என்றே பிரச்சாரம் செய்தனர். நான் இப்பொழுது பைபிளிலிருந்து மேற்கோள் காட்டுகிறேன் என்றால் இம்மாதிரி விஷயங்களை எல்லாம் விட்டுவிடுகிறேன். நான் சொல்லுபவை இவ்வுலக விஷயங்களல்ல. "Kingdom of God" (ஆண்டவன்

அரசு) என இயேசு பெருமான் பேசினர். ஆனல் நாமோ ஆண்டவன் இராஜ்யத்தை பொதுவானத்துறையில் இவ்வுலகிலேயே காணக்கூடியவர்களாகக் கிளம்பி இருக்கிறேம்.

நட்புறவு யாத்திரைக்காரர்கள் மிகவும் முட்டாள்கள். அவர்களுக்கு கருத்து பிரசார சுதந்திரம் கொடுக்கும் அரசாங்கமும் முட்டாள். சரியான சண்டை சமயத்தில் அவர்கள் படைப் பெருக்கம் கூடாது என்று பிரசாரம் செய்கிறர்கள். ஆனலும் அவர்கள் யாத்திரை செய்து பிரசாரம் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறர்கள். கிறிஸ்துவிற்குப் பிறகு கிறிஸ்தவர்கள் மிகவும் துன்புறுத்தப் பட்டனர். ஆனல் நம்மை யாரும் கொஞ்சமும் துன்புறுத்தவில்லை. அதற்கு பதில் மிகவும் கௌரவமே கொடுத்தார்கள். சிலர் தற்போது துன்புறுத்தினல் அது நல்ல ஆரம்பமேயாகும். சூழ்நிலை அமைதி அடையும், பண்டித நேருஜி அளித்த உறுதிமொழி சட்டத்தில் இடம் பெறும் என நம்புகிறேன். அதன் பின்னர் நல்ல சூழ்நிலை உருவாகும். தமிழ்நாட்டு மக்கள் ஹிந்தியை நன்ருக கற்பார்கள். ஏனென்ருல் தமிழ்நாட்டினர் மிகவும் புத்திசாலிகள். ஆகையால் அவர்கள் ஹிந்தி கற்பதை எதிர்க்கமாட்டார்கள்.

தமிழகத்தில் எல்லாம் தமிழில் நடைபெற வேண்டுமென வற்புறுத்த வேண்டுமென்று எழுதியிருக்கிறீர்கள். இது மிகவும் மகத்துவம் வாய்ந்ததொன்று. இது சாதகமான முயற்சி. நேற்று இதற்குக் கொஞ்சம் காலமாகும் என்று சொன்னேன். ஆனல் சில விஷயங்களுக்கு காலம் தேவையில்லை. உடனே பயிற்சி மொழியாக்கலாம். விஞ்ஞானம் கற்பிக்கவேண்டுமானல் தமிழில் கற்பிக்க வேண்டும் ஆக்ஸிஜன், ஹைடிரஜன் போன்ற சொற்கள் வேண்டுமானல் ஆங்கிலத்தில் இருக்கட்டும். இம்மாதிரி ஆங்கில சொற்களைப் பயன்படுத்துவதனல்

ஒன்றும் கெட்டுவிடாது. தமிழர்களிடம் மிகப் பெரிய சக்தி இருக்கிறது-"அம்" சேர்த்தால் தமிழாகிவிடுகிறது. ஆகையால் எல்லா மொழிகளையுமே பயிற்சி மொழியாக உடனே செய்யலாம். இதற்கான தகுதி எல்லா மொழிகளுக்கும் இருக்கிறது. இதை வற்புறுத்த வேண்டும். நீதிமன்ற நடைமுறைகளையும் தமிழில் நடத்தலாம். தீர்ப்பு எழுதும்போது சட்டசம்பந்தமான கலைச் சொற்கள் வேண்டுமே என்ற கேள்வி எழுகிறது. அதற்கான கலைச் சொற்கள் தமிழில் இல்லாவிட்டால் தீர்ப்பை ஆங்கிலத்தில் எழுதலாம் மூலம் ஆங்கிலத்தில் இருக்கும். அது தமிழில் மொழி பெயர்க்கப்படும். ஆங்கிலமே அதிகார பூர்வமானதாக மதிக்கப்படும். தமிழ் மொழியில் கலைச் சொற்கள் உருவானதும் தமிழிலேயே எல்லாம் செய்யலாம். தற்போது ஆங்கிலத்தையே பிரமாண மானதாக வைத்துக் கொள்ளுவோம் இது பொது அறிவைப் பொறுத்த விஷயம். சிலர் தாங்களே தங்களை எரித்துக் கொண்டு இறந்தார்கள். தமிழுக்கு ஆபத்து எனக்கருதி இவ்வாறு செய்து கொண்டார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகையால் தாய் மொழியில் விரைவில் விவகாரங்கள் நடைபெற வேண்டுமென்று நீங்கள் அவசியம் வற்புறுத்துங்கள்

பயிற்சி முகாம் நடத்துவது போன்றவை நிர்வாக விஷயங்கள். இது நல்லது. அனைவரும் சேர்ந்த பெரிய சமூகம் சர்வோதய கூட்டம். பயிற்சி முகாம்கள் நடத்தலாம். அதன் செலவுகளை காந்தி நிதியும், சர்வோதய சங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதும் சரியே. இம்மாதிரி ஊழியர் முகாம்கள் நடத்தும்போது ஏதேனுமொரு விஷயத்தை விளக்குவதற்கு சர்வோதய அன்பர்களோடு வெளியில் இருப்பவர்களின் உதவியையும் பெற வேண்டும். இத்தகைய பயிற்சி முகாம்களில் கொஞ்சம் உலக நடைமுறைகளைச் சொல்ல வேண்டும். கம்யூனி

சத்தைப் போல, உலகம் எதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கம்யூனிசத்தில் உற்பத்தி பெருக வேண்டுமென்ற கருத்தில் ருஷியாவில் தனிநபர் சொத்துரிமை வழங்கி வருகின்றனர். தனிப்பட்ட சொத்துரிமையை ஒரு அளவு வரை ஏற்றுர்கள். அனுபவத்தில் மாற்ற வேண்டி நேரிடுகிறது. ருஷியா மாறிவருகிறது, சீனுவும் மாறும்.

கிராம சபை

கிராம சபை கிராமத்தின் தர்மகர்த்தாவாக வேண்டும். வயல்கள் மக்களிடம் இருக்கவேண்டும் என்பது நமது கருத்து. இது கூட்டுப்பண்ணே முறையல்ல. பண்ணே தனிப்பட்டவர்களிடம் இருக்கும். இரண்டு அல்லது மூன்று விவசாயிகள் இதில் ஒன்று சேர்ந்து சேவை கூட்டுறவு என்ற முறையில் செயல்படலாம். கிராம சபையின் பெயரில் சொத்துரிமை, நிலம் விவசாயிகள்கையில், ஆண்டுதோறும் தானம் கொடுக்கவேண்டும் என்ற இந்தக் கருத்து அஹிம்சை அடிப்படையில் அமைந்தது என்பதோடு உற்பத்தி பெருக்கத்திற்கும் இதுபயன்படும். கம்யூனிசமும் தனது கருத்தை மாற்றிக்கொண்டு, அனுபவத்தில் இதற்கு விலக்களிக்க வேண்டியிருக்கும். பொதுவாக இதற்கு நான் ஒருஉதாரணம் சொன்னேன்.

உலகாட்சி

இப்பொழுதும் உலகமெங்கும் ஒரே அரசாங்கம்—உலக இராஜ்யம் உருவாக வேண்டுமென்று பெரிதும் விரும்புகின்றனர். உலக டிரிபியூனலாவது அமைய வேண்டும்; ஒவ்வொரு நாடும் தன்னுடைய சுதந்திரத்தில் ஒரு பகுதியை உலகாட்சிக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்ற எண்ணத்தை இந்த அணுயுகம் ஏற்படுத்திவிட்டது. இக்கருத்துடனேயே எங்கும் சிந்திக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முகாம்களில் இது கொஞ்சம் இடம்

பெறுவது அவசியம். நம்முடைய பிரச்னைகள் சிறியன அல்ல. சிறிய பிரச்னைகள் கூட திடீரென்று சர்வதேச பிரச்னைகளாக மாறிவிடுகின்றன. ஹாங்காங் ஒருசிறிய பிரதேசம். ஆனால் அதை ஆக்கிரமிக்க சீனவிற்குத் துணிவு இல்லை. அது ஹாங்காங்கை தொடாது. அதற்கு அதனால் வாணிப நன்மை இருக்கிறது. ஆக்கிரமிப்புச் செய்தால் உலகப்போர் ஏற்பட்டுவிடும் அது இருக்கட்டும், பெரிய விஷயம் போர்ச்சுகீசிய தீவு இருக்கிறது. இதன்மீது சீன படையெடுப்பதில்லை. ஏனெனில் அது சர்வதேச பிரச்னையாகி விடுமென்று அதற்குத் தெரியும். பழைய காலமாக இருந்திருந்தால் அது எளிதாக படையெடுத்திருக்கும் உலகிற்கே இதன் விபரம் தெரிந்திருக்காது. ஆனால் தற்போது ஏதாவதுகொஞ்சம் நடந்தாலும் உலகம் முழுவதும் அதன் பிரதிபலிப்பு இருக்கும். ஆகையால் சின்னஞ்சிறிய விஷயங்களையும் நாம் உலகக் கண்ணேட்டத்தில் பார்க்க வேண்டும்.

மொழிப் பிரச்னையைப்பற்றி திட்டங்கள் வரைவதால் அது தீர்ந்துவிடாது, பரந்த அடிப்படையில் அதை அணுகவேண்டும். கிராமதானமும் உலகக் கண்ணேட்டத்தில் அமைந்தது. சற்று சிந்தித்தோமானால் கிராமீயக்கதர் கிராம சுயராஜ்யத்தின் ஆதாரம். உலக இராஜ்யம் ஏற்படும்போது கிராமங்களுக்கு அதிக மகத்துவம் ஏற்படும். ஒவ்வொரு கிராமமும் ஒரு குடும்பமாக இருக்கும். இந்தியா ஒரு மாகாணமாகவும், தமிழ்நாடு ஒரு மாவட்டமாகவும் இருக்கும். இந்த விஞ்ஞானயுகத்தில் இத்தகைய குடும்ப மனப்பான்மையை கிராமங்களில் அமல் செய்ய வேண்டும். அது இல்லாமல் கிராமங்களுக்கு பாதுகாப்பு இருக்காது. எவ்வளவு அன்புச் சட்டத்தை குடும்பங்களுக்குப் பயன்படுத்துகிறீர்களோ அவை கிராமத்திற்கும் வேண்டும். அவை கிராமதானத்திலும் கதரிலும் இருக்கின்றன.

கதர் என்பதற்கு கிராமத்தொழில் என்பது பொருள். கிராம மக்களுக்கு கிராமத்திலேயே தொழில் கிடைக்க வேண்டும். மின்சாரம் போன்ற சக்தி கிடைத்தாலும் சரி, அணுசக்தி வந்து பரவல் முறையில் அமைந்தாலும் அதனுல் தொழில் கிடைக்கும். இந்த விஷயத்தில் நமது கருத்து குறுகியதல்ல. நமது திட்டங்கள் அனைத்தும் ஜெய் ஜகத்தை ஆதாரமாகக் கொண்டது. ஆகையால் ஜெய் ஜகத்தின் மகத்துவத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அடுத்தவனின் தோல்வி நமது வெற்றி என்ற எண்ணம் இதுவரை இருந்து வருகிறது. இனி எல்லோருக்கும் வெற்றியே உண்டாக வேண்டும், யாருக்கும் தோல்வி ஏற்படக்கூடாது என்று விரும்புகிறோம்.

பாபா இப்பொழுது மூன்று சூத்திரங்களைப் பற்றி சிந்தித்தார். அதில் எல்லோருக்கும் வெற்றியிருக்கிறது. யாருக்கும் இவற்றில் தோல்வி இல்லை என்பது இவைகளின் சிறப்பு. ஹிந்தி பேசுபவர்களுக்கும் தோல்வி இல்லை, தென் நாட்டவர்க்கும் தோல்வியில்லை. இருவருக்கும் வெற்றியே. இதை சமாதானச் சூத்திரம் என்றும் சொல்ல முடியாது. இது தலை சிறந்த உண்மை. " Compromise " என்று ஒருபுத்தகம் இருக்கிறது. அதில் பல வகையில் விவாதித்து எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே சத்தியம் என்று காட்டப்பட்டுள்ளது நாம் " காம்ப்ரமைஸ் " (சமாதானம்) என்பதில் நாம் எதையும் விடுவதில்லை. சத்தியத்தை தொடர்ந்து காப்பாற்றுகிறோம். சத்தியம் சமாதானமல்ல, சத்தியமாகவே இருக்கிறது.

இப்பொழுது எனக்கு அநேக சிந்தனைகள் இருக்கின்றன. நான் பேசுகிறேன். உலகத்திலுள்ள மக்கள் நமது முனிவர் பேசுகிறார், ஆனால் அவர் சொல்லுவதை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்று நினைக்கிறார்கள். சீன-பாரதம் சண்டைக்கு என்ன செய்வது ? எல்

லேத் தகராறுகள், கர்நாடகம்—மகாராஷ்டிரம் எல்லேச் சண்டை போன்றவைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பன போன்றவற்றை என்னிடம் கேட்டால், "இரு தரப்பினரையும் உட்காரச் சொல்லுங்கள். கோரிக்கை மகாராஷ்டிரத்தினுடையது என்ருல் அதனுடைய கோரிக்கையை குறைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். கர்நாடகத்தவர்களிடம் நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கொடுக்கலாமோ கொடுங்கள் என்றுகூறுங்கள். இரண்டு பேருடைய கோரிக்கைகளேயும் இரண்டு துண்டுக் காகிதங்களில் எழுதிப்போடுங்கள். ஒரு பையன் அவற்றில் ஒன்றை எடுக்கட்டும். அவன் எடுத்த காகிதத்தில் குறித்துள்ளதை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றே நான் யோசனே சொல்லுவேன். இது நடைமுறைக் கேற்றதோ இல்லேயோ! பாரதத்தில் மகாராஷ்டிரத்தில் கன்னடர்கள் வசிப்பதும், கர்நாடகத்தில் மகாராஷ்டிரர்கள் வசிப்பதும் இருக்காது. பாரதம்-சீனு விஷயத்திலும் நான் இதைத்தான் சொல்லுவேன். நான் சீனுவிடம் குறைந்தபட்ச கோரிக்கை விடும்படிச் சொல்லுவேன். அவர்களின் அதிகபட்ச கோரிக்கை அந்தமான், நிக்கோபர், இந்தியப் பெருங்கடலில் பாகம் கோருவதாக இருக்கலாம். பாரதத்திடம் குறைந்த பட்சம் என்ன தர முடியும் என்று கேட்பேன். இது இரு நாடுகளின் பிரச்னே. ஆகையால் கோரிக்கை குறைந்தபட்சமாக இருந்தால் சண்டை முடிந்து விடும். உங்களுக்கு ஆண்டொன்றுக்கு 800 கோடி ரூபாய் மீதமாகும். அவர்களுக்கு 1,200 கோடியும், பாகிஸ்தானுக்கு 400 கோடியும் மீதப்படும். இவ்வாறு மொத்தத்தில் 2,400 கோடி ரூபாய் ஒரு துண்டு காகிதத்தால் மீதமாகும். ஆனல் மக்கள் இதை நடக்கக் கூடிய காரியமாகக் கருதவில்லே. இது மிகவும் நடைமுறைக்குகந்தது என்பது என்னுடைய கருத்து. சமாதானத்துக்கு எல்லாவற்றையும்விட எளிதானது இதனுல்

இழப்பு ஒன்றுமில்லை. சீனர்கள் டில்லியையும், இந்தியர்கள் பீகிங்கையும் கேட்கிருர்களென்ருல் நான் சீட்டெழுதிப் போடும்படிச் சொல்லமாட்டேன். இது அறிவைப் பொறுத்த விஷயம். இங்கே எல்லைப் பிரச்னை இருக்கிறது. இதில் இங்குள்ளது அங்கு வந்தால் பெரிய விஷயமொன்றுமில்லை. ஆகையால் சொல்லுகிறேன் டில்லி–பீகிங் கோரிக்கையாக இருந்தால் சண்டைசெய்ய வேண்டியதே அந்தச் சண்டை எப்படி இருக்க வேண்டும் என்பது தனிப் பிரச்னை. ஒரு டிரிபியூனல் அமையும் வரை சண்டை செய்ய வேண்டியிருக்கும். ஆனல் எல்லைக்காக சண்டை செய்வது முற்றிலும் வீண் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனல் மக்கள் இதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆயினும் பாரதத்தில் மக்கள் கேட்கிருர்கள், கல் எறியவில்லை ' Then They began to stone him and he went under ground " என்று பைபிளில் ஒருவாக்கியம் வருகிறது. ஏனெனில் அவர்கள் அறிவாளிகள். எப்பொழுது அடிவாங்க வேண்டும், எப்பொழுது வேண்டாமென்பதை அவர்கள் அறிந்திருந்தனர். சிலுவையில் அறையும் சந்தர்ப்பம் வந்தபோது " நடக்கட்டும் " என சிந்தித்தனர். ஆனல் முட்டாள்கள் கல் எறிந்தால் ஏன் அடிவாங்க வேண்டும்; ஆகையால் தலைமறைவாகி விட்டார்கள். இந்தக் கருத்துக்கள் எல்லாம் உலகசமாதானக் கண்ணேட்டத்தில் நம்முடைய திட்டத்தோடு இணைந்திருக்கின்றன. நாம் பேசும் சமாதானம் நடைமுறைக்கு ஏற்றது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பாபா நடைமுறை வாதியாக இல்லாவிட்டால் சக்திமிக்க கிராமதானத்தை விட்டுவிட்டு சுலப கிராமதானத்திற்கு ஏன் வருகிருர் ? கருத்துக்களை நாம் மக்களுக்கு முன்னர் வைப்போம். குறிப்பாக பயிற்சி முகாம்களில் மாணவர்களுக்கு பரந்த உலகக் கண்ணேட்டத்தை எடுத்து விளக்கவேண்டும்.

திரு. அருணாசலம் கருணைகூர்ந்து ஓராண்டு சென்னையில் வசிக்க முடிவு செய்திருக்கிறார் என்று எழுதியிருக்கிறீர்கள். அவர் பல ஆண்டுகள் அங்கு வசித்தவர். அவருக்கு பாரதம் முழுவதன் கண்ணோட்டமிருக்கிறது. இன்னொரு மனிதரானால் அவரிடம் இந்தக் கண்ணோட்டம் இருக்காது. இன்றுள்ள பிரச்னை அடுத்த ஆண்டும் தோன்றும் அப்போது அவர் அதிக ஞானியாக இருப்பார் இதற்கு வழி ஒவ்வொரு இடத்திலும் இரண்டு மனிதர்கள் இருக்க வேண்டும். பிரசிடெண்ட்-வைஸ்பிரசிடெண்ட் என்பதைப்போல கே. அருணாசலம்-வைஸ் கே. அருணாசலம். இன்றுள்ள 'வைஸ்' அடுத்த ஆண்டு முக்கியமாக இருக்கும். முதல் மனிதர் அதை விட்டு நீங்கிவிடலாம். இதுவே முறை, இல்லாவிட்டால் மனிதன் விடுபட முடியாது.

இராஜாஜி தன்னோடு தொண்டு செய்வதற்காக வேலைக்காரனை வைத்துக் கொண்டிருந்தார் அவர் ஜம்னாலால்ஜியின் வீட்டிற்கு வரும்போது, நான் ஜம்னாலால்ஜியிடம், " இவ்வளவு பெரிய ஞானி தன்னோடு ஏன் மாணவர்களை, வைத்துக் கொள்ளக்கூடாது? ஒரு வேலைக்காரனை வைத்துக் கொண்டால் அவன் எப்பொழுதும் வேலைக்காரனாகத்தானே இருப்பான். மாணவர்கள் கூட இருந்தால் அவர்களுக்கு அறிவும் திறமையும் கிடைக்கும், என்று சொன்னேன். இது விபரம் இராஜாஜிக்குத் தெரிந்தபோது, " இப்படிப்பட்ட மாணவர்கள் எங்கே கிடைக்கிறார்கள் ? " என்று சொன்னார். தலைவருக்கு மாணவர்களாக கிடைக்கமாட்டார்கள். என்னுடைய சகோதரர் சிவாஜியைத் தருவதாக நான் சொன்னேன். இராஜாஜியும் ஏற்றுக் கொண்டார். சிவாஜி அவரோடு போனார். இரண்டு-மூன்று மாதங்கள் அவருடன் சேர்ந்து சுற்றினார். கொஞ்சம் தமிழ் கற்றுக் கொண்டார். இவர் நல்ல அறிவாளி என்பதை அறிந்த இராஜாஜி

திருச்செங்கோடு ஆசிரமத்தில் இவரை இருக்கும்படிச் சொன்னார். அங்கே நான்கு—ஐந்து மாதங்கள் தங்கி வேலை செய்தார். நன்றாக தமிழ் கற்றார். ஒரு நாள் பேசாமல் அதை விட்டுவிட்டு என்னிடம் வந்து விட்டார். "ஏன் வந்தாய்" என்று கேட்டேன். "ஆசிரமத்தில் வசிப்பதானால் இங்குதான் ஆசிரமம் இருக்கிறதே. இங்கேயே இருக்கிறேன், தமிழ் கற்றுக் கொண்டு விட்டேன். அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆகையால் வந்து விட்டேன்" என்று அவர் சொன்னார். இவ்வாறு மாணவர்களை வைத்துக் கொண்டால் அவர்கள் பயிற்சி பெற்றவர்களாவார்கள்.

கிராமதானத்தைப் பற்றி இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. முதலாவது, கி ரா ம தா ன கிராமங்களில் வெளியார் கையில் நிலங்கள் இருந்தால் அவர்கள் அவற்றை கிராம சபையிடம் சாகுபடிக்குக் கொடுக்க வேண்டும். உரிய பங்கு அவர்களுக்குக் கிடைக்கும். இந்தக் கோரிக்கை முற்றிலும் சரியானது என்பது என்னுடைய கருத்து. நான் முன்னேர இதற்காக சத்தியாக்கிரகம் செய்யவும் அனுமதியளித்திருக்கிறேன். பாபா சத்தியாக்கிரகத்திற்கு அனுமதி கொடுக்க மாட்டார் என்று நினைத்தார்கள். எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய விஷயத்திற்கு சத்தியாக்கிரகம்; புரியாத விஷயத்திற்கு பிரசாரம் அவசியம். இது பொது அறிவைப் பொறுத்தது அரசாங்கத்தை கேட்டுக் கொண்டிருக்கிறோம் அது கொஞ்சம் கொஞ்சமாக இதைப் புரிந்து கொள்ளும் என்று நம்புகிறேன்.

இரண்டாவது பிரச்னை-மடாதிபதிகள் சற்று அன்போடு நிலங்களைக் கொடுத்தால் அவர்களுக்கு நஷ்டமொன்றும் ஏற்பட்டுவிடாது. மடாதிபதிகள் மக்களை மிகவும் துன்புறுத்தி குத்தகை வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு என்னிடம் வந்திருக்கிறது. தமிழ் நாட்

டைப் பற்றி எனக்கு அதிக அனுபவமில்லை ஜகநாத் பூரியிலிருந்து வந்த குற்றச்சாட்டு இது. ''நாங்கள் ஏங்களுக்காக வாங்கவில்லை. இங்கு சாப்பாடு நடக்கிறது, மக்கள் வருகிருர்கள், தானம் செய்கிறேம்; இத்தகைய பரோபகார பணிகளுக்குத்தான் இவையெல்லாம் '' என்று மடத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லுகின்றனராம். அவர்கள் சமாதானப் படுத்த விரும்புகின்றனர். அரசாங்கத்தையும் அதில் கொண்டுவர நினைக்கிருர்கள் இதுசரியல்ல. இவ்விரண்டு விஷயங்களிலும் நான் உங்களுடன் ஒத்துழைக்கிறேன்.

மொழிச்சண்டை ஆரம்பமாயிற்று. நான் உங்கள் முன்னுல் பேசுகிறேன். என்னுடைய மனதில் நாயகம்ஜி, ஆஷாதேவியின் நினைவு வந்தது. தமிழ்நாட்டவர்களுக்கு எடுத்துச் சொல்ல இவர்கள் இருவரும் தகுந்தவர்கள். ஹிந்திக்கு நாயகம் செய்திருப்பதைப் போல வேறுயாரும் செய்ய வில்லை. ஹிந்தி சரியாக பேசவரா விட்டாலும் ஹிந்தியிலேயே பேசுவது என்று நாயகம் உறுதி எடுத்துக் கொண்டார். இதனுல் பலதடவை அவர்மேல் தப்பபிப்பிராயம் ஏற்பட்டது நாயகம் மிகவும் பிடிவாதக்காரர் என்று சொன்னுர்கள். ஆனுலும் ஹிந்தியிலேயே தொடர்ந்து பேசும் வழக்கத்தை வைத்திருந்தார். அவர் ஹிந்திக்கும் தமிழுக்கும் பிரதிநிதி. ' நாம்-தமிழர்கள் ' சிலோனில் கொஞ்சமும், இந்தப் பக்கம் திருப்பதியும் கிடைத்து விட்டால் நல்லது என்கிருர்கள். நாயகம் சிலோன்காரர், நாம் தமிழர்களைச் சேர்ந்தவர். கோடையில் நான் அங்கு போனுல் என்னுடைய பிரதிநிதியாக அவரை நான் உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

அவர் இன்னமும் தமிழை மறக்கவில்லை, நன்ருக வங்காளியும், மராட்டியும் அறிந்திருக்கிருர். பைபிளை படிப்பதற்காக ஹிப்ரு மொழியும் கற்றுக் கொண்டார். சர்வதேச நோக்கில் இது முக்கியமான விஷயம். கிருஸ்

தவராக இருந்தாலும் அவர் புலாலுணவை எதிர்ப்பவர். குரங்கு வயலை அழிக்கிறது, அதைச்சுட வேண்டும்என்று சேவாகிராம ஆசிரமத்தில் பேச்சு கிளம்பியது. காந்திஜி யின் மற்ற நண்பர்கள் இதற்கு தயாராகி விட்டார்கள். ஆனால் நாயகம்ஜி "குரங்கு மனிதர்களின் முன்னோர் வகையைச் சேர்ந்தது." என்றார். அவருக்கு அதனிடம் அனுதாபம் இருந்தது மும்மொழிச் சூத்திரம் வகுக்கப் பட்டுவிட்டது. இம்மாதிரியான மனிதர்கள் சந்தர்ப்பத் தில் பெரிய வேலை செய்கிறார்கள். சகோதரி மார்ஜரி சைக்ஸ் நாகா குன்றுகளுக்குப் போயிருக்கிறார். அங்கு அவர் மிகவும் பயன்பட்டார். மனிதனுடைய உள்ளத் தில் ஒரு எண்ணம் இருக்கிறது. தமிழ் நாட்டுக்கு நாய கம்ஜி அவசியம் பயன்படவேண்டும்.

பிரம்மா வித்யா மந்திர் எல்லா மொழிகளையும் கற் கும் இடமாக வேண்டும்; இடமாக இருக்க முடியும். இதற்கு அதிக செலவாகாது. தனித்திட்டம் வகுத்தால் செலவு பிரச்னை எழும். இங்கு உணவைத்தவிர வேறு செலவில்லை. இங்கு பல மொழிகளும் பேசுபவர்கள் இருக் கிறார்கள். தமிழ் பேசுபவர் ஒருவர்தான் வேண்டும். இம் மாதிரி வேலையை இங்கு சுலபமாகச் செய்யமுடியும். ஒரு அகில பாரத அகராதி தயாரிக்கவேண்டும் எல்லாமொழி களிலும் பொதுவான சொற்களைத் தொகுத்து, அந்தச் சொல் எத்தனை மொழிகளில் பழக்கத்தில் இருக்கிறது என்பதையும் அதற்கு முன்னால் எழுதலாம் என்று நான் யோசனை சொன்னேன். "பர்வ" என்ற சொல்லின் முன் னால் 14 என்று எண்ணை எழுதவேண்டும். உங்களுடைய "கஷ்டம்" என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுவோம். இரயிலில் உட்கார்ந்தால் எல்லா இடங்களிலும் இந்த சொல்லைக் கேட்கலாம். இம்மாதிரியான ஒரு அகராதி தயாரானால் பாரதம் முழுவதும் பழக்கத்தில் உள்ள சொற்

களைத் தெரிந்து கொண்டு அவைகளைப் பிரசாரம் செய்ய முடியும். ஆங்கிலச் சொற்களும் அதில் இடம் பெறும். '' டிக்கெட் '' என்ற சொல் இருக்கிறது. இதற்கு வேறு சொல்லை உருவாக்குவது வீண்வேலை. இவ்வாறு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக பொதுவாகப் புழங்கிவரும் சொற்களை எடுத்துக் கொள்ளுவோம். இது போன்றே உருது, பார்ஸி சொற்களும். இம்மாதிரியான அநேக வேலைகள் உட்கார்ந்தபடியே செய்யலாம். இங்கு பிரம்ம வித்யா மந்திருக்கு வரும் தமிழர்கள் பிரம்ம வித்தை பசியுடையவர்களாக இருக்க வேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு மொழியும் பேசும் மனிதர்கள் இங்கிருந்தால் நாம் ஒரு ஆபீஸே நடத்தலாம். இதற்காக எனக்கு ரூபாய் கிடைத்திருக்கிறது. சென்னையிலிருந்து ரூ. 160/. அங்கே 16,000 சர்வோதய பாத்திரங்கள் இருக்கின்றன. அதற்கான 16000 பைசா, 160 ரூபாய் எனக்குக் கிடைத்தது. இதை நான் எனது ஆபீஸிற்காக செலவு செய்ய தீர்மானித்தேன் ஒவ்வொரு சர்வோதய பாத்திரத்துக்கும் ஒரு பைசா வீதம் நன்கொடை தாருங்கள். அதைக் கொண்டு நான் ஆபீஸ் நடத்திவிடுகிறேன். நூல்நிலையம் இருக்கிறது. புதிய புத்தகங்கள் வந்தால் பழையதை நீக்கிவிடுவேன் இதனால் அதிகமாக நூல்கள் சேராது. ஒவ்வொரு மொழியிலும் தலைசிறந்த நூல்கள் இங்கு இருக்கும். இம்மாதிரி 13–14 மொழிப் புத்தகங்களின் விலையும் கிடைத்து விடும். இதை ஒரு யோசனையாக உங்கள் முன் வைத்தேன்

(பவனார், பிரம்ம வித்யா மந்திர், 17—3—65)

எமது சர்வோதய இலக்கியம்

மகாத்மா காந்தி எழுதியவை

1	சர்வோதயம்	0	75
2	ராமநாமம்	1	00
3	சன்மார்க்க சமயம்	0	50
4	கீதா போதம்	1	00
5	ராட்டைத் தத்துவ விளக்கம்	1	25
6	ஆசிரம வாழ்க்கை	1	50
7	சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	1	25
8	ஆசிரம பஜனாவளி	1	00
9	பஞ்சாயத்து ஆட்சி	0	60
10	கீதையின் சாரம்	0	60
11	சமூகத்தில் பெண்கள்	0	50
12	கர்ப்பத்தடையா, பிரம்மசர்யமா?	0	80
13	உலக அமைதிக்கு அஹிம்சாவழி	0	70
14	சைவ உணவின் சிறப்பு	0	50
15	என் அபேதவாதம்	0	80
16	உடலுழைப்புத் தத்துவம்	0	50
17	இந்தியாவின் உணவுப் பிரச்னை	0	90
18	தர்மகர்த்தா தத்துவம்	0	60
19	கூட்டுறவு விவசாயம்	0	25
20	மதுபானம் என்னும் மாபாதகம்	0	40
21	கிராமக் கைத்தொழில்கள்	0	60
22	பொதுவுடைமையும் பொதுவுடைமைவாதியும்	0	50
23	யான் போற்றும் இயேசுபெருமான்	0	70
24	வலிந்தேற்ற ஏழைமை	0	50

மகாத்மாவைப்பற்றிய நூல்

1	பாப்பாவின் காந்தி	1	25
2	காந்திக் காட்சிகள்	1	75
3	காந்தி வாழ்க்கைச் சித்திரம்	0	80
4	பாபு—என் தாய்	1	00
5	காந்திய நவநீதம்	2	50
6	காந்தியும் மார்க்ஸூம்	1	50
7	கஸ்தூரிபா	2	00

சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர்.

எமது சர்வோதய இலக்கியம்

வினோபாஜி நூல்

1	கீதைப்பேருரைகள் மலிவு	2	00
	காலிகோ	3	00
2	கல்விச் சிந்தனைகள்	3	00
3	ஸ்வராஜ்ய சாஸ்திரம்	1	00
4	ஸ்திதப்ரக்ஞ தரிசனம்	1	50
5	ஈசாவாஸ்ய விருத்தியுரை	1	00
6	சாம்யயோக சூத்திரம்	1	00
7	சாந்தி சேனை	1	75
8	சர்வோதய பாத்திரம்	0	50
9	ஜெய் ஜெகத்!	0	37
10	இம்சைக்கு மருந்து	0	25
11	பாட்டாளிகளே!	0	40
12	கிராமந்தோறும் சுயராஜ்யம்	0	25
13	வணிகரே வாரீர்	0	25
14	அதிகாரிகளின் கடமை	0	45
15	'ராமநாம' விமர்சனம்	0	60
16	வாழ்க மகாத்மா!	0	60
17	அஹிம்சை ஆய்வு	1	50
18	ஆசிரம பிரக்ஞோபநிடதம்	1	50
19	மும்முனை சர்வோதயத் திட்டம்	0	20
20	சுலப கிராமதானம்	0	60
21	மகளிர் மாண்பு	1	60
22	சர்வோதயமும் இன்றைய பிரச்னையும்	1	00
23	கிராமதானப் புயல்	0	75
24	மொழிப் பிரச்னை	0	60

சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர்.